# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 33
விலை ரூபாய் 20.00

தீபம்–33
ஒக்டோபர் இதழ்–2016 ,ஆரம்பம் 15 மாசி–2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


**என் நெஞ்சே: நீ ஆண்டவரைப் போற்றிடு" (தி.பா:146:1)**



## ஆயரின் செய்தி

**கிறிஸ்து இயேசுவில் அன்பான சகோதர சகோதரிகளே!**

ஒக்டோபர் மாதம் செபமாலையின் மாதம். மரியன்னையையும் அவரதுபண்புகள், வாழ்வைத் தியானித்து செபமாலை சொல்லி விசுவாசத்தில் எம்மை உறுதிப்படுத்த சிறப்பான மாதம் இது. செபமாலைத் தியானம் எமக்கு இலகுவாக செபிக்க கொடுக்கப் பட்ட கொடை. இதை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். செபிக்கும் குடும்பம் நிலைக்கும். சவால்கள் பல தரும் இவ்வுலகில் செபமாலை எமக்குப் பாதுகாப்பு. எனவே குடும்ப செபமாலையை நாம் உற்சாகப்படுத்த வேண்டும், பங்கு மட்டத்திலும் செபமாலைத் தியானத்தை ஊக்குவிக்க வேண்டும். இம்மாதம் ஆன்மீக வளர்ச்சி நிறைந்த மாதமாக அமைய வாழ்த்துகிறேன்.

ஒக்டோபர் முதலாம் நாள் குழந்தை இயேசுவின் தூயதெரேசா திருவிழா. இவர் கார்மேல் சபையைச் சேர்ந்தவர். எனவே இது கார்மேல்சபையினர் திருவிழா சிறப்பாக மூதூர் தூயதெரேசா கன்னியா மடத்தின் திருவிழா கார்மேல்சபை சகோதரிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

3ம் திகதி தூயபிரான்சிஸ் அசிசியின் திருநாள். தூயபிரான்சிஸ் காலத்தின் தேவைக் கேற்ப அழைப்பு பெற்று தனது வாழ்வை மாற்றி ஏழைகளுக்காக தன்னை அர்ப்ப ணித்தவர். செல்வந்தகுடும்பத்தில் பிறந்து வளர்ந்தாலும் ஏழைகள் மட்டில் அவருக்கு இரக்கம் இருந்தது. இறைவனும் திருச்சபையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த அசிசியாரைத் தனது கருவியாகப் பயன்படுத்தினார். ஏழைகள் மீது இரக்கம், ஏழ்மை, சமாதானம், இயற்கையோடு அன்பு போன்றவை இவரது சிறப்பான பண்புகளாகும். எமது மறைமாவட்டத்தில் பணியாற்றுகின்ற பிரான்சிஸ்கன் சபை குருக்களுக்கு எமது வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவர்கள் பணி தொடர செபிப்போம். தூய அசிசியாரைப் போல நாமும் ஏழ்மையில் வாழவும் சமாதானத்தை வளர்க்கவும் எம்மை அர்ப்பணிப்போம்.

☞ தொடர்ச்சி 2ம் பக்கம்

## அன்னை திரேசா புனிதராக அருள்பொழிவு செய்யப்பட்டதற்கான நன்றித் திருப்பலி.







தூய மரியாள் பேராலயத்தில் கடந்த 25.09.2016. அன்று எமது மறைவாட்ட ஆயர் அதி.வண.கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் தூயவராக அன்னை திரேசா அருள் பொழிவு செய்யப்பட்ட நன்றித் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப் பட்டது அத் திருப்பலிக்கு அருட்தந்தை யர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் அனைவரும் வந்து சிறப்பித்தமை குறிப் பிடதக்கதாகும். இன்றைய திருப்பலி நிகழ்வுக்கு முன்னதாக இலிங்க நகர் கருண நிவாசாவயோதிபர்கள் பாண்ட் வாத்திய இசையை இசைத்து ஆயரை வரவேற்றனர். திருப்பலியில் ஆயர். அவர்களால் அன்னை திரேசாவைப் பற்றிய சுருக்க விளக்கமும், உரோமா புரியில் நானும்



அந்நிகழ்வில் கலந்து கொண்டமை பெரும் பாக்கியம் எனவும், தெரிவித்தார் திருப்பலியை மேலும் சிறப்பிக்க அன்னைதிரேசா சபையைச் சேர்ந்த இலங்கைக்கு பொறுப்பான அருட் சகோதரி மேரி ஜொவறானஸ் கலந்து சிறப்பித் தமையும் மகிழ்வுக் குரியதாகும். அன்னையின் பணி கிறிஸ்து வுக்கு சான்று பகர்ந்த பணியாகும் எனவே அவர் தூயவராக் கப்பட்டார். அன்னையின் சபை பணிகள் மேலும் சிறக்க வாழ்த்துவோம்.



## வரவேற்கின்றோம்.

அருட்பணி ஜோசப் டன்ஸ்ரன் பிரட்றிக்,உரோமை நகரில் தனது மேற்ப்படிப்பை முடித்துக் கொண்டு எமது மறை மாவட்டத்திற்கு பணிப் பொறுப்பை ஏற்க வந்துள்ளார். அவரை வாழ்த்துவோம், அவரது பணி சிறக்க செபிப்போம்.

## யாழ் மறைமாவட்ட மேய்ப்புபணி – 2016 "புதிதாய் வாழ்வோம்"





யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்அதிவந்தனைக்குரிய கலாநிதி ஜஸ்ரின்பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் வழிநடத்தலில் புதிதாய் வாழ்வோம் என்னும் தலைப்பில் செயலற்ற விசுவாசம் உயிரற்றது என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட மேய்ப்பு பணி மாநாடு செப்ரம்பர் மாதம் 29, 30 ம் திகதிகளிலும் ஒக்டோபர் 01ம் திகதியும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் நடை பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொள்ள தமிழ் மறைமாவட்ட ங்களின் பொது நிலையினர் பிரதிதகளை அழைத்ததற் கிணங்க திருகோணமலை மறைமாவட்டத்தின் சார்பில் பொது நிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. றொஹான் பேணாட் அடிகளாரும் அலைஓசை சஞ்சிகையின் இணை ஆசிரியரான ஓய்வு பெற்ற திருகோணமலைய வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.கிறிஸ்ரி முருகுப்பிள்ளை அவர்களும் இச.அன்ரனிதாஸ் அவர்களும் அழைப்பை ஏற்று பார்வையாளர்களாக இம் மாநாட்டில் இதில் கலந்து சிறப்பித்தார்கள். இம் மாநாட்டிற்கு யாழ் மறைமாட்ட குரு முதல்வர் அருட்பணி. கலாநிதி யோசப்தாஸ் ஜெபரெட்ணம் அடிகளார் தொகுத்து வழங்கி செயல்வடிவம் கொடுத்த துடன் அமலமரித்தியாகிகள் சபையின் முன்னாள் முதல்வர் அருட்பணி சா.மசெல்வரெட்ணம் (கரவையூர் செல்வம்) அடிகளார் மாநாட்டின் ஆரம்பத்தில் திசை காட்டல் உரையை நிகழ்த்தியதுடன் இம் மாநாட்டை சிறப்புற நெறிப்படுத்தி ஊக்குவிப்பாளராக (Facilitator) பணி புரிந்தார்.

☞ தொடர்ச்சி 2ம் பக்கம்

## தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தின் தோற்றம் வளர்ச்சி.



1965ம் ஆண்டு தை மாதம் 9ம் திகதி காலை 9மணியளவில் கொழும்பு பேராயர் இல்லத்தில் வரவேற் பறையிலே ஒரு கூட்டம் நடைபெற்றது. நான்கு பேர் அதில் பங்குபற்றினர். அந்த கூட்டமானது இலங்கையில் மறைக்கல்விப் பணியை புதிய பாதைக்கு இட்டுச் செல்லும் ஒரு வரலாற்று நிகழ்வாக அமையும் என யாருமே எண்ணியிருக்கவில்லை. பிறேசில் நாட்டில் நான்கு வருடங்கள் மறைக்கல்வி பற்றிய விசேட பயிற்சி பெற்று வந்திருந்த அருட்பணி தொன்சில்வேஸ்டர் (இவர் பின்நாளில் காலி ஆயர்) அடிகளாரின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. ஒரு அருட்சகோதரியும் பொது நிலையினர் இருவரும் இக் கூட்டத்தில் பங்கேற்றனர். பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததன் பின்னர் வீழ்ச்சியடைந்திருந்த கத்தோலிக்க கல்விக்கு எவ்வாறு புத்தூக்கம் / புத்துயிர் அளிக்கலாம் என்பது பற்றி ஆழமாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

☞ தொடர்ச்சி 6ம் பக்கம்

## புதிய ஆயர்களுடனான திருத்தந்தையின் சந்திப்பு




கடந்த இரண்டு ஆண்டுக ளில் உலக அளவில் ஆயர் களாக நியமனம் பெற்ற 90 ஆயர் களை திருத்தந்தை வத்திக் கானில் சந்தித்து உரையாடினார். அவற்றுள் எமது மறைமாவட்ட ஆயர் அதி.வண. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையும் திருத்தந்தையின் சந்திப்புக்கு உட்பட் டவர் என்பது குறிப்பிடக் கூடிய விடயமாகும் இந்நிகழ்வு பற்றிய புகைப் படங்களைக் காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் பாறையாகிய ஆண்டவர் போற்றி போற்றி (திபா.144:1)**

## உங்களோடு பேசுகிறேன்...

**அருட்பணி N.C. அருள்வரதன்**

மாதம் ஐப்பசி மீண்டும் உங்களோடு பேசுவதற்கு எனக்கொருவாய்ப்புக் கிடைத்தது பெருமகிழ்வே. இம் மாதத்திலே சர்வதேச ரீதியிலே பல முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். உலக சிறுவர், சிறுமியர் தினம், சர்வதேச மது ஒழிப்புத்தினம் என்பவைகள் கொண்டாடப்படுகின்றன. ஆனால் அதனை வெறும் கொண்டாட்டமென்று மட்டும் கொள்ளாமல் இக்காலத்திலே சிறுமியர் சந்திக்கும் வாழ்வின் சவால்களை சிந்திக்க வேண்டும். பாடசாலை மாணவிகள் அதிபர், ஆசிரியர்களால் கேவலப்படுத்தபவதும் ஏன் தந்தையர் கூட இதே கீழ்த்தர செயற்பாடுகளில் இறங்கி பிள்ளைகளின் வாழ்வை சீரழிப்பதும் பரவலாகக் கேட்கப்படும் செய்திகளாக உள்ளன. இந்தநிலை மாற்றி அமைக்கப்பட்டு சிறுவர், சிறுமியர் அச்சமின்றி வாழும் நிலை உருவாக வேண்டும்.

இம் மாதம் 23ம் திகதி மறைபரப்பு ஞாயிறு கொண்டாடப்படுவதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும் மேலும் இம்மாதத்திலே அன்னைதெரேசாவின் தினமும் சிறப்பிக்கப்படுகின்றது. அதேவேளை கத்தோலிக்க ஆசிரியர்தினம், உலக ஆசிரியர்தினம் கொண்டாடப்படுகின்றது. கற்பிக்கும் ஆசிரியர், அவர்களின் பணிகள், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அனைத்தையும் ஊடுருவி மாணவர்களின் வெற்றியே ஆசிரியர்களின் பெருமையாகக் கொள்ளப்படுகிறது. எது எப்படி எனினும் ஆசிரியர் பணியை இலகுவாக கொள்ளமுடியாது. எனவே அனைத்து ஆசிரியர்களுக்கும் இம் மேலான நாளிலே எமது ஆசீரும் நல்வாழ்த்துக்களும் சென்றடைவதாக.

மேலும் இம்மாதம் 29ம் திகதி இந்துமக்கள் தீபாவளிப்பண்டிகையைக் கொண்டாடுகின்றார்கள். அனைத்து இந்து மக்களுக்கும் தீபத்திருநாளின் நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றோம்.

இன்னும் பங்கு மட்டங்களிலே அலஸ்தோட்ட இறைமக்கள், தம்பலகாமம் இறைமக்கள், இலிங்கநகர் இறைமக்கள் மூதூர் சோமபுரம் இறைமக்கள் தங்கள் பங்குகளின் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றார்கள். எல்லோருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்.

இம்மாதத்திலே சர்வதேச உணவுத்தினம், சர்வதேசவறுமை ஒழிப்புத் தினங்களும் கொண்டாடப்படுகின்றது. இவைகள் வெறுமனே கொண்டாட்ட நிலைகளைக் காட்டாமல் வறுமைகளின் மறைவையும், புதுவாழ்வையுமே மக்கள் கண்டடையச் செய்ய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் தினம் கொண்டாடப்படவுள்ளது .நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் எதிர்ப்புகோஷங்கள், கட்சிகளிடையே கருத்து மோதல்கள், விசாரணைகள், சிறை இப்படியான பலத்த ஓசைகள் இக்காலத்திலே சர்வ சாதாரணமாகப் பரவிக்கொண்டிருக்கின்றன. நமது நாட்டிலும், உலக நாடுகளிலும் அமைதியும், சமாதானமும் நிலைகொள்ள வேண்டுமென்றும் அனைத்துமக்களும் நீதியோடு கூடிய அமைதியான வாழ்வை வாழவேண்டு மென்றும் வாழ்த்திக்கொண்டு இம்மாதத்திலே குருத்துவ நாளைக் கொண்டாடுகின்ற அருட்பணி ஏ.பொன்சியன்(அ.ம.தி) அடிகளாரையும் வாழ்த்தி,மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறிநிற்கிறேன்.

1ம் பக்க தொடர்ச்சி

### ஆயரின்செய்தி

எமது மறைமாவட்டத்தில் பணியாற்றுகின்ற பிரான்சிஸ்கன் சபை குருக்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்கள் பணிதொடர செபிப்போம். தூய அசிசியாரைப் போல நாமும் ஏழ்மையில் வாழவும் சமாதானத்தை வளர்க்கவும் எம்மை அர்ப்பணிப்போம்.

18ம் திகதி நற்செய்தியாளர் தூயலூக்கா திருவிழா. பிற இனத்தவராக மனமாற்றம் பெற்ற தூயலூக்கா ஒரு வைத்தியர். தனது அழைப்பு, விசுவாசம், அறிவைப் பயன்படுத்தி நற்செய் திஎழுதியுள்ளார். நான்கு நற்செய்திகளுள் ஒரு நற்செய்தியாக இவரது நற்செய்தி அமைந்துள்ளது. இது இரக்கத்தின் ஆண்டு. இறைவனின் இரக்கத்தை இயேசுவின் வாழ்வு, பணிபுதுமைகள் மூலமாக லூக்காவெளிப்படுத்துகின்றார். எனவே இதை இரக்கத்தின் நற்செய்திஎனவும் அழைக்கிறோம். தூயலூக்காவைப் போன்று எமது ஆற்றல்களை இறைவனின் மகிமைக்காகப் பயன்படுத்துவோம்.

23ம் திகதி ஞாயிறு மறைபரப்புதல் ஞாயிறு. இயேசு தனது பணிக்காலத்தின் இறுதியில் தன் சீடர்களை தயார்படுத்திதன் பணிதொடர கட்டளையிட்டார். உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள். மக்களை சீடர்களாக்கி திருமுழுக்கு கொடுங்கள். உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன் என்றார். இப்பணி தொடர சீடர்கள் தம்மை அர்ப்பணித்தனர். நற்செய்தி உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட திருச்சபை சரித்திரத்தில் பலகுருக்கள்,துறுவறத்தவர் தம்மை அர்ப்பணித்தனர். இன்று நாம் இயேசுவை அறிந்திருக்கிறோமென்றால் இவர்களது அர்ப்பணமே காரணம். அன்று இயேசு தொடங்கி வைத்தபணி இன் றுஎமது செயல்பாடுகள் மூலமும் தொடரவேண்டும். இதற்குப் பலவழிகள் உண்டு.

**1. எமதுசெபவாழ்வு:** செபவாழ்வில் நாம் உறுதியாக இருந்தால் எமது ஆன்மீகம் பலம் கொண்டதாக இருக்கும். எனவே தனித்த செபம், குடும்ப செபம், பங்கு வழிபாடுகள் எனநாம் எம்மை அர்ப்பணிப்போம்.

**2. சான்றுவாழ்வு:** நாம் குருக்கள், துறுவறத்தவர், பொதுநிலை விசுவாசிகள். ஒவ்வொருவரது சூழ்நிலையும் வேறுபட்டது. ஆனால் எமது இலக்கு ஒன்றே. குடும்பம், பாடசாலை, வேலைத்தளம், பங்கு, விளையாட்டு மைதானம் எந்த இடமாக இருந்தாலும் நாம் எமது வார்த்தை,மனநிலை,செயல் மூலமாக இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் எடுத்துரைக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

**3. மறைபணியாளர்களுக்காக செபம்**: இன்றும் உலகின் பல பகுதிகளில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். பலர் தம் விசுவாசத்திற்காக உயிரையும் பலியாக்கியுள்ளார்கள். இதுபோன்ற இடங்களில் பணியாற்றும் மறைபணியாளர்களுக்காகவும் நாம் செபிக்க வேண்டும்.
மறைபணிதொடர எமது வாழ்வின் மூலமும், செபத்தின் மூலமும் நன்கொடைகள் மூலமும் எமது பங்களிப்பை தாராளமாகச் செய்வோம்.
மறைமாவட்ட மேய்ப்புப்பணிமாநாடு நவம்பர் மாதம் 26ம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கு ஆயத்தமாக இரண்டு கருத்தரங்குகளை நாம் ஒழுங்கு செய்துள்ளோம்.
**ஒக்டோபர் 22:** குடும்பஅப்போஸ்தலத்துவம் பற்றியகருத்தரங்கு'AmorisLaetitia' எனும் தலைப்பில் குடும்பங்களில் அன்புபற்றிய நூலை திருத்தந்தை வெளியிட்டுள்ளார். இதன் பின்னணியில் குடும்ப அப்போஸ்தலத்துவத்தை ஊக்கப்படுத்தும் முகமாக எதிர்வரும் வருடங்களில் அதிககவனமெடுத்து செயல்படவுள்ளோம். இதற்கு ஆயத்தமாக ஒக்டோபர் 22ம் திகதி சிறப்புக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.
**நவம்பர் 05:** பொதுநிலையினர் பணி,பங்களிப்பு, கல்வி போன்ற தலைப்புக்களை மையமாகக் கொண்டு விசேட கருத்தரங்கு. ஒரே திருச்சபையாக நாம் இணைந்து மறைமாவட்ட வளர்ச்சிக்கு எவ்வாறு எமது பங்களிப்பை செய்யலாம் என்று சிந்தித்து செயல்பட இக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்படுகின்றது. **நவம்பர் 26:** மறைமாவட்ட மேய்ப்புப்பணிக் கூட்டம். இதன் போது திருத்தியமைக்கப்பட்ட பங்கு மேய்ப்புப்பணிமற்றும் மறைமாவட்ட மேய்ப்புப்பணி யாப்புகள் அங்கீகரிக்கப்படும். ஏதிர்வரும் வருடங்களுக்கான திட்டங்களும் விளக்கப்படும்.
**இம் மூன்று நாள் நிகழ்வுகளும் இனிதே நிறைவுற செபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எமது மறைமாவட்டம் மேலும் வளர அனைவரது ஒத்துழைப்பையும், செபத்துணையையும் நாடிநிற்கிறேன். இறைவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.**

**கிறிஸ்துவில்**
**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

1ம் பக்க தொடர்ச்சி

### யாழ் மறைமாவட்ட மேய்ப்புபணி மாநாடு -2016 "புதிதாய் வாழ்வோம்"

நாங்கள் ஒரு இறைமக்கள் குழுமம் இ நாங்கள் ஒரு வழிபடும் குழுமம் இ நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் 03 பிரிவுகளில் ( 03 அரங்கு ) நிலைப்பாட்டு ஏடுகள் வாசிக்கப்பட்டு அதில் குழு ஆய்வுகள் இடம்பெற்றது முக்கிய அம்சமாகும். யாழ் மறைமாவட்ட ஆயர் விடுத்த அழைப்பிற்கிணங்க கடந்த 06 மாதங்களாக கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இ பங்குகள் இ உப பங்குகள் இ குடும்பங்கள் ஆகியவற்றுக்கு பயிற்றப்பட்ட அருட்சகோதரர்கள் நேரடியாக சென்றதுடன் திருச்சபையின் அங்கத்தவர்கள் மட்டுமல்லாது திருச்சபையின் விளிம்புகளில் உள்ளோரையும் சந்தித்து அவர்களையும் ஆண்டவரின் பாதத்தில் கொண்டு வர முயற்சிகள் மேற்கொண்டு இம்மாநாடு வெற்றிகரமாக நடைபெற உதவியமையை நேரடியாகவே எம்மால் காணக்கூடியதாய் இருந்தது. இதனை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.மேலும் அனைவரதும் கூட்டு முயற்சியினாலும் கடின உழைப்பாலும்இம்மாநாடு வெற்றிகரமாக முழுமை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இம்மாநாட்டின் முதல்நாள் நிகழ்வில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மனுவேல் ஆண்டகையும் இரண்டாம் நாள் நிகழ்வில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் ஆண்டகையும் மூன்றாம் நாள் நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு இம்மாநாட்டின் கருப்பொருளிற்கு மேலும் வலுவூட்டினர்.

இம்மாநாட்டில் சிறப்பு அதிதிகள் மறைமாவட்ட குருக்கள் ஏனைய மறைமாவட்ட (மன்னார் மட்டக்களப்பு) பொதுநிலைப் பிரதிநிதிகள் ஆண் துறவற சபைகள், துறவற அருட்சகோதர சகோதரிகள் மறைமாவட்ட ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள் மறைக்கல்வி ஆணைக்குழுவின் பிரதிநிதிக் மறைக்கோட்டங்களின் பிரதிநிதிகள் மறைக்கோட்ட வளவாளர்கள் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பங்குகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கலாக 425 உறுப்பினர்கள் கலந்துகொண்டு கலந்துரையாடப் பட்ட 03 அரங்குகளின் அடிப்படையில் தமது கருத்துக்களை பகிர்ந்ததுடன் குழு ரீதியாகவும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு

யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் தற்போதய நிலையை எடுத்துக்கூறியதுடன் அடுத்த 05 ஆண்டுக்கான யாழ் மறைமாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய முதன்மைப் பணிகளையும் கலந்துரையாடி முன்வைத்தனர்.

யாழ் மறைமாவட்டத்தில் புதுமையினையும் புனிதத்துவத்தினையும் புகட்டி ஒரு புதிய பாதையில் அனைவரையும் இட்டுச்செல்ல "புதிதாய் வாழ்வோம்" என்னும் மகாநாட்டிற்கு பொருத்தமான கீதம் சிறப்பாக அவ்வப்போது இசைக்கப்பட்டதும் அனைவராலும் பாடப்பட்டதும் கலந்து கொண்டவர்களிடம் ஒரு உத்வேகத்தையும் மாநாட்டின் நோக்கத்தினையும் உணர்ச்சிபூர்வமாக உணர்த்தியிழுத்தது என்றே நாம் கூறலாம். மேலும் "இறைவார்த்தையின் ஒளியில் நற்கருணை ஆண்டவரின் அருளில் யாழ் மறைமாவட்டத்தைப் புதுப்பிப்போம்" என்னும் மாநாட்டு இலச்சினையின் விளக்கம் இம்மூன்று நாளில் நிறைவாகியுள்ளதால் இதற்காக முயற்சி எடுத்த அனைவரையும் பாராட்டுவதுடன் இம் மாநாட்டின் கருப்பொருள் முழுமைபெற செபிக்கின்றோம்.

ச.அன்ரனிதாஸ்
பொருளாளர் ,
மறைமாவட்ட மேய்ப்புபணி சபை
திருகோணமலை மறை மாவட்டம்.

வாசகர்களே!
உங்கள் ஆக்கங்கள் கவிதைகள் கட்டுரைகள் பங்கின் டிசய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்பார்க்கின்றோம்.அவற்றைத் திருமலைத் தீபத்திற்கு அனுப்பி வை-க்கவும்.
குறிப்பு: பங்கு சார்ந்த செய்திகளை பங்குதந்தையின் அனுமதியுடன் அனுப்பிவையுங்கள்.
அனுப்ப வேண்டிய முகவவரி: ஆசிரியர் திருமலைத்தீபம்
297 டொக்கியாட் வீதி திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரக்கத்தின் ஆண்டு சிறப்புப் போட்டி சிறுகதைப் போட்டியில் 3ம் இடம் பெற்ற சிறுகதை.

### "இரக்கமுள்ளோர் தம் செயலால் தாமே நன்மை அடைவர். இரக்கமற்றோரோ தமக்கே ஊறு விளைவித்துக்கொள்வர்" (நீதி மொழிகள்11:17)



மலர், மேரி என்ற இரு பள்ளி தோழிகள். சிறுவயதில் இருந்தே. நெருங்கிய நண்பிகள். இருவரும் ஒரே பாடசாலையில் தரம் 11ல் கல்வி கற்று வருகின்றனர். பாடசாலைக்கு நடந்து செல்வதே இவர்கள் வழக்கமாக இருந்தது. இவர்களில் மலர், பிறருக்கு உதவி செய்வதிலும், தினசரி ஆலயங்களும் செல்வதிலும் மிகுந்த ஆர்வம் உள்ளவர். பாடசாலையிலும் எல்லோராலும் விரும்பப்படகூடிய ஓர் திறமையான மாணவியாக காணப்பட்டாள். இருந்தும் இவளுடைய நண்பி மேரி, பிறருடைய கஷ்டங்களை பெரிதாக பொருட்படுத்தாமலும். ஆலயங்களுக்கு ஓர் பொழுது போக்காகவுமே சென்று கொண்டிருந்தாள் படிப்பிலும் பெரிதாக அக்கறை கொள்வதில்லை. இருந்தும் இருவரும் நல்ல நண்பிகளாவே பழகி வந்தனர். காலம் செல்ல தொடர்ச்சியாக, பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் மலரை பாராட்டுவது, மேரிக்கு எரிச்சலையே அதிகரித்துகொண்டிருந்தது. இவ்வாறே நாட்களும் செல்ல, பாடசாலையில் 1ம் தவணைப் பரீட்சைக்கான மீட்டல் வகுப்புக்கள் பரபரப்பாக நடந்து கொண்டிருந்தன. மாணவர்களும் தங்களுக்கு தேவைப்படும் பாடகுறிப்புக்களை ஆசிரியர்களின் உதவியுடன் பெற்றுக் கொண்டனர். இப்படியிருக்கு, திடீரென மலர் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டாள். பாடசாலைக்கும், செல்லமுடியாத நிலையில் சிலநாட்கள் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டாள் பரீட்சை நெருங்கி கொண்டிருக்கும் தருவாயில் பாடசாலைக்கு போக முடியாததையிட்டு. கவலை அடைந்தாள். இருந்தாலும் "தனது தோழி மேரி இருக்கிறாள், தனக்கு தேவையான பாடங்களை அவளிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்" என தன்னை ஆறுதல் படுத்திக் கொண்டாள். காய்ச்சலும் குணமாகி வீடு திரும்பிய மலர், மேரியை தொடர்பு கொண்டு விடுப்பட்ட பாடங்களை தருமாறுகேட்டுக்கொண்டாள். இதை ஓர் நல்ல சந்தர்ப்பமாக பயன்படுத்திய மேரி, தனது புத்தகங்கள் தொலைந்துவிட்டதாக மலரிடம் பொய் கூறி விட்டாள். ஏனைய தோழிகளும் பரீட்சை மிக அண்மையில் உள்ளதை காரணமாக கூறி .புத்தகங்களை மலருக்கு வழங்க மறுத்து விட்டனர்.பரீட்சையின் இறுதி கட்டத்தில் நின்ற மலரால் ஒன்றும் செய்யமுடியவில்லை தன்னிடம் உள்ள பாடங்களை வைத்துக் கொண்டே பரீட்சைக்கு தயாராக முடிவெடுத்து கடுமையாக படிக்க தொடங்கினாள்.

பரீட்சை நாளும் வந்தது. இரு நண்பிகளும் பரீட்சைக்கு சென்றார்கள் தொடர்ச்சியாக ஐந்து நாட்களுக்கு பரீட்சை நடைபெற்று. தேர்வுமுடிவுகள் வெளியாகின .இருவருமே சாதாரணசித்தியை பெற்றிருந்தனர். வெளியான முடிவுகள் ,மேரிக்கு மகிழ்ச்சியளத்தன. காரணம். மலர்தனக்கு இணையாக சாதாரண சித்தியை பெற்றிருப்பதும் ,ஆசிரியர்கள் மலரை பாராட்டாமலு இருந்தமையே தொடர்ந்தும் வழமை போன்றே இருவரும் ஒன்றாக பாடசாலைக்கு சென்று வந்துகொண்டிருந்தனர். இதனிடையே மேரியின் பிறந்த நாளுக்கான ஏற்பாடுகள் மிகவும் சிறப்பான முறையில் நடந்து கொண்டிருந்தன. மேரி தன்னுடைய எல்லா பள்ளித் தோழிகளுக்கு அழைப்புவிடுத்திருந்தாள். பிறந்த நாளும் வந்தது. மேரியின் அழைப்பை ஏற்றுக்கொண்டு எல்லா பள்ளித் தோழிகளும் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு. மகிழ்ந்திருந்தனர். அனைவரும் மேரிக்கு தங்களது அன்பை வெளிப்படுத்தும் வண்ணம் வெவ்வேறுபட்ட அன்பளிப்புக்களை வழங்கி, தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர். விசேடமாக மேரியின் தந்தை பிறந்த நாளன்று புதிதாக ஓர் அழகிய சைக்கிளை, தனது அன்பு பரிசாக மேரிக்கு வழங்கினார் .அது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. பாடசாலை முடிந்து வீடு திரும்பியபின், தினமும் மாலையில் சைக்கிள் ஓடி பழகி கொண்டிருந்தாள்.

இவ்வாறே நாட்களும் சென்றன. மேரியும் நன்றாகவே சைக்கிளை ஓடபழகிவிட்டாள். வழக்கத்திற்கு மாறாக பாடசாலைக்கும் சைக்கிளில் செல்ல தொடங்கி விட்டாள். மலருடைய பழக்கத்தை மெதுவாக குறைத்து. பாடசாலையில் ஏனைய நண்பர்களுடன் தனது. பழக்கத்தை அதிகரித்து கொண்டாள். தன்னுடைய நண்பி, தனது நட்பை புறக்கணிப்பதை எண்ணி மலர் மிகவும் கவலை அடைந்தாள். இருந்தும் மேரியின் சந்தோஷத்திற்கு அவள் ஓர் தடையாக இருக்க விரும்பவில்லை. இவ்வாறே நாட்களும் செல்ல, பாடசாலையில் இரண்டாம், மூன்றாம் தவணை பரீட்சைகளும் நடந்து முடிந்தன. எல்லா மாணவர்களும் நடைபெற இருக்கும் **O/L** பரீட்சைக்காக தங்களை முழுமையாக ஆயத்தப்படுத்தி கொண்டிருந்தனர்.

இவ்வாறே"தான் ஒரு கணக்காளராக வரவேண்டும் எனும் இலட்சியத்துடன் இருந்தமலரும் தனது முழுகவனத்தையும் படிப்பில், செலுத்தினாள். ஆனாலும் இவளுடைய தோழிமேரி, படிப்பில் கவனம் செலுத்தாது. தொலைகாட்சி பார்பதிலும், வீட்டில் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்வதாக கூறிவிட்டு. ஏனைய தோழிகளுடன் சுற்றிதிரிந்தாள். இது அவளுடைய வழமையாக இருந்தது. இவ்வாறு ஒருநாள் மேரி வீதியால். வீடு நோக்கி வந்து கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக அவ்வழியால் வந்த ஆட்டோ ஒன்றில் அடிபட்டு கீழே விழுந்தாள். உடனே வீதியில் நின்றவர்களால் மேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். அவளுடைய கால் மிகவும் பாதிக்கப்பட்டு, அவளால் எழுந்து நடக்கவும் முடியாத நிலையில் இருந்தாள். எனவே வைத்தியர்களின் ஆலோசனைக்கேற்ப. அவளுக்கு காலில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டி இருந்தது. சிகிச்சைகள் முடிந்து. தொடர்ந்து பத்துநாட்கள் வைத்தியசாலையிலிருந்து. பின் வீடு திரும்பினாள் மேரி. இருந்தாலும் மேரியால் தனித்து இயங்க முடியாதவாறு காலில் பல கட்டுகள் போடப்பட்டிருந்தன. இவ்வாறு அவள். தன்னுடைய நிலையை எண்ணி மிகவும் வேதனை அடைந்தாள். நடைபெறவிருக்கும் பரீட்சையை நினைத்துமிகவும் அச்சம்கொண்டாள். இவளுடைய இந்நிலைமையை ஏனைய நண்பிகள் மூலம் அறிந்து கொண்ட மலர். உடனே இரக்கத்தோடு தன் நண்பியை சென்று பார்த்தாள். அவளின் மனநிலையை புரிந்து கொண்டு. ஆறுதல் வார்த்தைகள் கூறி அவளை தேற்றினாள். பரீட்சையை எண்ணி அஞ்ச வேண்டாம் நான் உதவுகிறேன் என்று மேரிக்கு மன தைரியத்தை வழங்கினார். அவ்வாறே இருவரும் ஒன்றாக சேர்ந்து படிக்க ஆரம்பித்தனர். தற்போது மேரியின் உடல்நிலையும் மெதுவாக தேறிவந்தது. இருவரும் கடும் முயற்சியுடன் உழைத்தனர். மேரியும் தற்போது பரீட்சைக்கு நன்றாகவே தயாராகி விட்டாள். தன்னுடைய நிலையை உணர்ந்து கொண்ட மேரி, மலரின் இரக்க உள்ளத்தை கண்டு வியந்தாள் தான் தன்னுடைய நண்பிக்கு எதிராக, செய்த தவறை எண்ணி, இறைவன் முன்னிலையில் மன்னிப்பு வேண்டினாள். "இனியாவது எல்லோரிடமும் இரக்கம் காட்ட வேண்டும்" என முடிவெடுத்தாள் இறுதியில் பரீட்சை நாளும் வந்தது. இருவரும் திறமையாக பரீட்சையை எழுதியிருந்தனர். இரண்டு, மூன்று மாதங்களின் பின் பரீட்சை பெறுபேறுகளும் வெளியாகின. மேரி எல்லா பாடங்களிலும் சித்திபெற்றிருந்தாள். இவளுடைய நண்பிமலர், மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தை பெற்று. அவளுடைய பெற்றோருக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்தாள். இருவரும் தங்களுடைய பெறுபேறுகளை முன்னிட்டு மகிழ்ச்சியடைந்தனர். இவ்வாறே இருவரும் தங்களது உயர் கல்விக்காக, மீண்டும் வழமை போன்று பாடசாலைக்கு ஒன்றாக சென்றார்கள்.

நன்றி.

செல்வி: புளோரிடா ஜேசுதாஸ் நவரட்ணசீலன்
37/6, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.

## ஆனந்த வெள்ளம்கவிதைப் போட்டி முடிவுகள்.

**பங்குபற்றியவர்கள் - 61 பேர்**

**சரியாக வடிவமைத்தவர்கள் - 12 பேர்**

| | | |
|---|---|---|
| 1ம் பரிசு 400/=ரூபா<br>ஆன் வஜிரா.ஆர்.எப்<br>இல:21/3,வித்தியாலயம் வீதி<br>திருகோணமலை. | 2ம் பரிசு 300/=ரூபா<br>திரு.ச.டேவிட்பிள்ளை.<br>இல.68,சகாய இல்லம்,<br>ஆசிரியர் சதுக்கம்.<br>உவர்மலை. | 3ம் பரிசு 200/= ரூபா<br>செல்வன் எஸ்.ஆரோன்<br>இல:ய48/204,கண்டிவீதி,<br>மட்டிக்களி,<br>திருகோணமலை. |

### பாராட்டுக்குரியவர்கள்

1. க.சுகந்தினி - மூதூர்
2. ம.ஜைமன் - மூதூர்
3. டானியாலா.ஆர்.எப் . -பேராலயம்
4. திரேசா.யோண்சன் - பேராலயம்
5. டே.மெருஷியன்பிள்ளை -உவர்மலை.
6. பி.பி.அன்ரனி பெர்னாண்டோ - மன்னார்.
7. என்.இந்திரக்குமார் - பாலையூற்று
8. ஆர்.டிலுக்ஸ்ராஜ் - செல்வநாயகபுரம்
9. ஜே.அனிற்ரா - அலஸ்தோட்டம்.

### சரியான கவிதைவரிகள்

எங்கள் நாடென்ற எண்ணங்களே
எல்லோர் மகதிலும் வேண்டுமே
எல்லா மனங்களும் ஒன்றாகியே
உறவோடு அன்பாக வாழும்போதே
இனிதான வாழ்வங்கு உதயமாகி
ஆனந்த வெள்ளமாய் பெருகிடுமே.

## இரக்கம் என்பது கடவுளின் திருப்பெயர்யூபில் ஆண்டின் சிறப்பு விவிலியத் தொடர்செின்றமாத தொடர்ச்சி

### 03. வீழ்ச்சியிலும் இறைவன் காட்டும் இரக்கம்

தன் சாயலிலும் உருவிலும் உருவான மனிதன். கீழ்படியாமையால் இறைவனின் கட்டளையை மீறி பாவம் செய்த போது இறைவன் தன் நீதியின் படி அவர்களைத் தண்டிக்கிறார். "ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அவர்களை அனுப்பி விடுகிறார்" (தொநூல்3:23) எனினும் இரக்கமுள்ள இறைவன் மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல் ஆடைகளை செய்து அவர்களை அணியச் செய்கிறார் (தொநூ 3:21) அவர்களை மீட்க வாக்குறுதியும் தருகின்றார். இது இரக்கத்தின் இனிய முகம்.

### 4.தொடரும் இறைவனின் இரக்கச் செயல்கள்.

தன்னை நோக்கிக் கதறும் மாசற்ற ஆபேலின் இரத்தக் குரலைக் கேட்டு கடவுள் காயினை தண்டித்து நீதி வழங்குகின்றார். காயினோ ஆண்டவரே மண்ணுலகில் நான் நாடோடியாக அலைந்து திரிய வேண்டி உள்ளது. என்னைக் காண்கிற எவனும் என்னைக் கொல்வானே!எனக் கதறும்போது இரங்கி "அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன் மேல் அடையாளம்" இடுகின்றார் (தொநூ 4:15)
அவ்வாறே வெள்ளப் பெருக்கினால் உலகை அழிக்கப் புறப்படும் கடவுள் நோவாவின் மீது கருணைக் காட்டுகினறார்.அவர் மற்றும் அவர் தம் குடும்பத்தின் வழியாக புத்துலகை படைக்க முனைகின்றார். பெட்டகமும் ,வானவில்லும், பலிப்பீடமும் இறைவனின் இரக்க முகத்தை இனிதே நமக்குப் படம் பிடிக்கின்றன.

அவ்வாறே அகந்தையினால் "பாபேல்" கோபுரம் கட்ட விழையும் மாந்தரை உலகமெங்கும் சிதறடித்தாலும் ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து உடன்படிக்கையின் இனத்திற்கு வழி செய்கின்றார் .இவை அனைத்தும் இறைவனின் நீதியையும் தண்டனையையும் தாண்டி அவர் கொண்டிருக்கும் அன்புள்ளத்தை நமக்கு இனிதே காட்டுகின்றது. விலகிச் செல்லாமல் வலிய சென்று உதவவும் சட்டத்தைத் தாண்டிய அன்பால் உலகை இனிதான இடமாக மாற்றவும் நம்மை அழைக்கின்றன

காட்டுப்புற சாலையொன்றில் அடிபட்டு குற்றுயிரும். குலை உயிருமாய் ஒருவர் அல்லாடிக் கொண்டிருந்தார். போக்குவரத்து அரிதான சாலையில் அவரை கவனிப்பார் எவருமில்லை. உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த வேளையில், அந்தவழியே போன கார் நின்றது. நடுத்தர வயது மிக்க ஒரு சகோதரர் வலிய சென்று அடிப்பட்டவரை தூக்கி, துடைத்து, முதலுதவி அளித்துத் தம் காரில் ஏற்றி அடுத்திருந்த நகரில் அவருக்கு சிகிச்சை அளிக்க உதவி செய்தார். அடிப்பட்டவரும் சுயநினைவுக்கு வந்து மருத்துவ சிகிச்சைக்கு பதிலளித்தார். நினைவு திரும்பிய அவர் தமக்கு உதவியவரைப் பார்த்து ஐயா தங்களின் மேலான உதவிக்கு நன்றி. தக்க சமயத்தில் வந்து எனக்கு உயிர் பிச்சை வழங்கியுள்ளீர். நன்றி! தாங்கள் யார்? தங்களின் பெயரென்ன? என்று கேட்டார். உதவி செய்தவர் சிரித்துக் கொண்டே "நீர் உயிர் பிழைத்தீர்!அது போதும் எனக்கு! விவிலியத்தில் அடிப்பட்டவருக்கு உதவிய சமாரியனுக்கும் கூட பெயர் இல்லையே, அது போல் தான் எனக்கும்!" என்று சொல்லி விட்டு போய் கொண்டே இருந்தார்.உதவுகிறோம் என்ற உணர்வே இல்லாமல் உள்ளிருந்து வழியும் கனிவினால் அடுத்தவரின் துயர் துடைப்பதே உண்மையான இரக்க மனதின் அடையாளம். இந்த ஒரு எண்ணமே நம்மில் நிறைந்து நிற்கின்றது தோரா என்னும் ஐந்நூலை வாசிக்கும் போது! "ஆண்டவர், இரக்கமும் பரிவும் உள்ள இறைவன். சினம் கொள்ளத் தயங்குபவர், பேரன்பு மிக்கவர். நம்பிக்கைக்குரியவர். ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர்" (விப 34:6 - 7 )

என இறைவனின் இரக்க மனதை விவிலியம் படம் பிடிக்கின்றது. இச்சிறு கட்டுரையில் "தோரா" எனப்படும் ஐந்நூலில் இறைவனின் இரக்க மனதை காண்போம். ஐந்நூலில் உள்ள மொத்த அதிகாரங்கள் 187. அவற்றில் சில முக்கியப் பகுதிகளை மட்டும் இங்கு ஆய்ந்து இறை இரக்கத்தின் தன்மைகளை உணர்வோம்.

தொடரும்.................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கள் மூடியதே........

## கடந்த காலக் கற்பனை

**அருட்பணி. N.C. அருள்வரதன்**

மாசிமாதத்துப் பனிப்புகார்களை அள்ளிச் சுமந்தபடி கடற்காற்று லாவகமாக உலாவிக் கொண்டிருந்தது. காலைக்கதிரவனின் ஒளிக்கீறல்கள் யன்னல் துவாரத்தினூடே ஊடுருவிக் கொண்டிருந்தன. தனது பரந்த மார்போடு தனது மகனை அணைத்துப் பிடித்தபடி உறங்கிக் கொண்டிருந்தான் சாரங்கன். கார்த்திகா அவள்தான் சாரங்கனின் மனைவி. தன் காலைக் கருமங்களை முடித்து விட்டு தேனீர்க் கோப்பையோடு அவனருகே வந்திருந்தாள். 'நல்லா விடிஞ்சு போயிற்று எழும்பித்தேத் தண்ணியைக் குடியுங்க' அவனது தோளைப்பிடித்து எழுப்பினாள் கார்த்திகா. அப்போது தான் விழித்துக் கொண்டசாரங்கன் குழந்தை போன்று அவளது மடியிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு உறங்குவது போன்றபாசாங்கு செய்தான் 'சரி..சரிஎழும்பித் தேத்தண்ணியைக் குடியுங்க. பிள்ளைக்கு பால்காய்ச் சிற்றுவாறன். இப்படிப்படுத்தா கடை திறக்கிறதில்லையா' அவனது தலையை வருடியபடி செல்லமாக அவனைக்கடிந்து கொண்டாள். இண்டைக்கு ஒருநாள் கடை திறக்காட்டி குடிமுழுகியா போகும். இந்த நாளில வேலையும் குறவுதானே. மனுஷனே வெளில நடக்கப் பயம், எப்படித்தான் இந்த 'கராச்சை' கொண்டு நடத்திறதோ தெரியல்ல. அலுத்துக் கொண்டான் சாரங்கன்.

'அப்பிடிச் சொல்லாதைங்க, என்னதான் இருந்தாலும் நாங்க மூண்டு நேரமும் சாப்பிறது அல்லது நாலுபேர் நம்மையும் மனுஷரென்று மதிக்கப்பண்ணிறதும் அந்த 'மெக்கானிக்' கடையிர உதவிதான். என்ன செய்யிறது காலம் கெட்டுக் கிடக்கு. கடவுள் தான் இதுக்கு ஒரு நல்ல முடிவைக் காட்ட வேணும்'. அவள் அவனுக்கு ஆறுதல் கூறினாள்.

கார்த்திகா சாரங்கனை மணந்து இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன. அவர்களின் ஆழ்ந்த அன்பிற்கு அடையாளம் அரவிந்தன். அவன் தான் அவர்களின ' ரேமகன். கார்த்திகாவைப் பொறுத்தவரை சாரங்கன் அவளுக்கு எந்தக்குறையுமே வைத்ததில்லை. ஒரு பெண்ணுக்கு என்னென்ன தேவையோ அதனைத்தெரிந்துவைத்துபோன்று அவன் நடந்துகொள்வான். அவளும் அவனைமுழுமையாகப் புரிந்துகொண்டவளாக அவனது மனம்நோக என்றுமே நடந்துகொள்வதில்லை. சிலநேரங்களில் அவன் அவளிடம்'கார்த்தி நான் வேலைக்குப் போறனான். இந்த நாளில வெளியில போயிற்று வீட்டுக்குத் திரும்பினால் தான் உண்மை. அந்த அளவு நிலமைமாறிற்று. சிலவேளை எனக்கு ஏதும் 'நடந்து போனாலும் நம்ம மகனை நல்லபடியா நீதான் உருவாக்கவேணும். உனக்குத் தேவையான பணத்தை பேங்கில போட்டிருக்கன்'. அவன் இப்படித் தொடரும் போது அவள் அவனது வாயை தனது கையால் மூடிக் கொண்டு 'வேற கத இல்லாட்டிச் சும்மா இருங்க'. அவள் உண்மையாகவே அவனைக் கடிந்து கொண்டாள். அவன் அதையும் ரசித்து மகிழ்வான். பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டது. சாரங்கன் காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சைக்கிளைத் தள்ளியபடி 'கார்த்தி நான் வாறன்' அவன் கூறும் போது அவன் மகனோடு நின்றாள்.

'போய்ட்டு வாங்க' வாசல் வரைசென்றுகணவனைவழியனுப்பிவிட்டுவந்தாள். இது அவளது வழமையான பழக்கமும் கூட. அவன் வேலை முடிந்து வரும் வரையும் அவளுக்கு நின்மதியே இருப்பதில்லை. அந்த அளவிற்கு காலம் சிதைந்து கிடந்தது. மனிதன் நின்மதியாய் நடமாட முடியாத காலமென எல்லோரும் உணர்ந்து விட்டதால் அவளையும் அந்த வேதனை வாட்டுவது ஆச்சரியப்பட வேண்டிய தொன்றில்ல. முற்றத்து மரத்தின் கீழ் இருந்த கதிரையிலே இருந்தாள் கார்த்திகா.அவளது மகன் அவளருகே விளையாடிக்கொண்டிருந்தான்.

கார்த்திகாவின் குடும்பத்தை 'பொறுத்தவரை அவளது குடும்பத்திலே பெற்றோரை விட சகோதரர்கள் ஐந்துபேர். இரண்டு அண்ணாமார், மூன்று அக்கா,இவர்தான் கடைசி. சகோதரங்கள் எல்லாம் கரையேறி விட்டார்கள். இவளும் மன நிறைவான வாழ்வைப் பெற்றுக் கொண்டவள்.

மற்ற சகோதரிகளைவிட கார்த்திகா எந்தவகையிலும் குறையின்றி வாழ்வது அவளது சகோதரங்களுக்கு பெருமையாகவும்,பெருமகிழ்வாகவும்இருந்தது. சாரங்கன் சாதாரண ஒரு தொழிலாளி. ' சைக்கிள் கராச்' ஆரம்பத்தில் தனியாகத் தொடங்கியவன். இப்போது இரண்டு மூன்றுபேர் அங்கு தொழில் செய்கிறார்கள். எல்லாரோடும் அன்பாகப் பழகும் மனப்பாங்கு.. அக்கடை வளர்ச்சியடையப் பெரிதும் உதவியதென்றே கூறவேண்டும்.

கடற்காற்று குழுகுழுவென்று வீசிக்கொண்டிருந்தது. சுவர்க்கடிகாரம்பனிரெண்டுமுறை அடித்துவிட்டு ஓய்கின்றது. கார்த்திகா மகனுக்குச்சாப்பாடு கொடுத்து விட்டு சாரங்கனை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். இன்னும் அரை மணிநேரத்தில் அவன் வருவது வழக்கம். வேலை அதிக மென்றால் அங்கு வேலை செய்யும் யாரையாவது அனுப்பி சாப்பாட்டை எடுப்பான்.அன்று இரண்டுமணிக்கு மேலாகியும் ஒருவரும் வராதது கார்த்திகாவுக்கு ஏதோ போலன்று இருந்தது. அந்த அளவிற்கு காலம் கெட்டுக்கிடந்தது. இடையே நகரைக் கலக்குகின்ற வழமையான வெடிச்சத்தம் இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தது. அவளால் எதையுமே செய்ய முடியாமல் இருந்தது.

தூரத்தே ரங்கன் அவன் தான் சாரங்கனுக்கு சாப்பாடு கொண்டு போகும் பொடியன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். அவனைக்கண்டதில் அவளுக்கு ஒருவித ஆறுதல். ஆனால்' வந்தவன் ஒன்றுமே பேசாமல் ஊமையாகி நின்றது அவளுக்கு என்னவோ ஏதோ போன்றிருந்தது. 'தம்பி அண்ணா வரல்லையா? ஆழமான கிணற்றிலிருந்து வெளிப்படும் தொனியிலே கார்த்திகாவின் குரல் கலக்கமாக வெளிப்பட்டது. 'அக்கா அண்ணாவை' அவன் சொல்லவந்ததை சொல்லமுடியாமல் விம்மிவிம்மி அழுதான். கார்த்திகாவுக்கு எல்லாமே புரிந்துவிட்டது. அடுத்த வினாடி அவளுக்கு என்ன நடந்ததென்றே தெரியாது. ஊர் கூடி விட்டது. சாரங்கனின் இறுதிக் கிரிகைக்குவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

**அரும்பாகி மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்த கார்த்திகா வின்வாழ்வு கருகிச்சோர்ந்துவிட்டது. அநியாயமாகஅழிக்கப்பட்ட சாரங்கனை நினைத்து அவளது கண்கள் ஆறாகக் கரைந்து கொண்டிருந்தன.**

**(யாவும் கற்பனையே)**

**2016ம் ஆண்டு பங்குனி மாதம்15 மற்றும் ஆடிமாதம் 21ந்திகதிகளில் நடைபெற்ற தேசிய வழிபாட்டு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு நிறைவேற்றுவதற்காக பரிந்துரை செய்யப்பட்ட கருத்துக்கள்.**

1. மறைமாவட்ட வழிபாட்டு இயக்குனர்கள் தங்கள் மறைமாவட்ட ஆலயங்களில் வழிபாட்டிற்கான சிறந்த வழிகாட்டலை கொடுத்தல்.

2. திருப்பலிப் புத்தகத்தில், குருக்களுக்காக கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் (Rubrics) சத்தமாக செபித்தலாகாது. சில செபங்கள் மௌனமாக செபிக்கப்பட வேண்டியவை. (GIRM 38)

3. பணியாளர்கள் அனைவருக்கும் பொதுவான திருவுடை நீண்ட வெள்ளாடை யாகும். அது தாகவே உடலோடு பொருந்தியிருக்குமாறு தைக்கப் பட்டிருந்தாலொழிய இடைக்கச்சையால் கட்டப்படும். இந்தப் பொது உடை கழுத்தைச் சுற்றி முழுவதும் மறைக்கவில்லை என்றால் அதை அணிவதற்கு முன் கழுத்துத்துணி அணியப்படும். நீண்ட வெள்ளாடைக்கு பதிலாக குறுகிய வெள்ளாடை பயன்படுத்தலாம். ஆனால் திருப்பலி உடையோ, திருத் தொண்டர் உடைக்கு பதிலாக தோள்துகிலைப் பயன்படுத்தும் போதும் குறுகிய வெள்ளாடை அணியலாகாது. (GIRM 336)

4. பலிப்பீடத்தை மலர்களால் அலங்கரிக்கும் போது, பீடத்திற்கு அருகிலோ அல்லது பீடத்தை சுற்றியோ அலங்கரிக்கலாம் பலிப்பீடத்தின் மேல் அல்ல. சாதாரண நாளில் இரண்டு விளக்குகள் ஞாயிறு மற்றும் பெருவிழாக்களின் போது 4 அல்லது 6 விளக்குகள் மறைமாவட்ட ஆயர் இருப்பின் 7 விளக்குகள் ஏற்றலாம். பலிப்பீடத்தில் மைக்கை கூட மறைந்திருக்கும் வண்ணம் பயன்படுத்தலாம். (GIRM 306)

5. வருகைப் பாடல் இருந்தால் வருகைப் பல்லவி சொல்லப்படமாட்டாது. (GIRM 48)

6. குரு வாழ்த்துக் கூறிய பின், திருத்தொண்டர் அல்லது விசுவாசி ஒருவர் அன்றைய திருப்பலிக்கான முன்னுரையை சுருக்கமாக சொல்லலாம். (GIRM 50:2)

7. ஆசி நீரினால் ஆசீர்வதித்தல் என்பது கிறிஸ்துவின் உயிர்ப்பையும் எமது ஞானஸ் நானத்தையும் நினைவூட்டுகின்றது. "ஞாயிறு தினம் அல்லது சிறப்பாக உயிர்ப்புக் காலத்தில் பாவசடங்கு வழிபாட்டுக்கு பதிலாக நீரினால் ஆசீர்வதித்தல் என்பது எமது நானஸ்ஞானத்தை நினைவூட்டுகின்றது". (GIRM 51 II). திருப்பலிக்கு முன் வருகைப் பாடலின் போது குருவானவர் தீர்த்தம் தெளித்தல் ஆகாது.

8. மன்னிப்பு வழிபாட்டின் போது குருவானவர் மன்னிப்பு வழங்கும் போது "எல்லாம் வல்ல இறைவன் நம் மீது இரக்கம் வைத்து.." என கூறும் போது தனது இரு கைகளையும் விரித்து ஆசீர்வதிக்க அவசியமில்லை. இது ஒரு ஒப்பரவுச் சடங்கு அல்ல.

9. காணிக்கையின் போது விசுவாசிகள் அப்பத்தையும் இரசத்தையும் காணிக்கையாக அளிப்பது பாராட்டக்குரியது. குருவோ திருத்தொண்டரோ வசதியான இடத்தில் நின்று இக்காணிக்கைகளை பெற்றுக்கொள்வார். குறிப்பிட்ட செபங்களை சொல்லி இக்காணிக்கைகள் பீடத்தின் மீது வைக்கப்படும். முற்காலத்தில் நடந்தது போல இன்று விசுவாசிகள் தங்கள் வீட்டிலிருந்து திருவழிபாட்டிற்காக அப்ப இரசத்தைக் கொண்டு வருவதில்லை. என்றாலும் காணிக்கைகளைக் கொண்டுவரும் சடங்கு இன்னும் ஆன்மீகப் பொருளும் ஆற்றலும் கொண்டுள்ளது. தவிர, காணிக்கை பவனியானது ஏழைகளுக்கு உதவும் முகமாக வழங்கப்பட வேண்டும். (GIRM 73:5)

10. காணிக்கை பவனியின் பின் குரு சகோதரரே என்று தொடங்கும் செபத்தை செபிக்கும் போது மக்கள் எழுந்து நின்று பதில் கூற வேண்டும்.

11. எழுந்தேற்றத்திற்கு பின்பு திருப்பலி புத்தகத்தில் உள்ள பதில்களை தான் செபிக்க வேண்டும். **மாறாக ஆராதனைப் பாடலோ, என் ஆண்டவரே என் தேவனே இவற்றை கூற முடியாது.**

12. எனவே, எவரும், திருப்பணியாளராக இருந்தாலும் கூட தனது சொந்த கருத்திற்கேற்ப, திருவழிபாட்டில் எதையும் **சேர்க்கவோ, நீக்கவோ, மாற்றவோ கூடாது.** (GIRM 24)

13. சிங்கள திருப்பலிப் புத்தகத்தை ஆய்வு செய்யும் ஒரு சில குருக்கள் மற்றும் ஒரு பொதுநிலை விசுவாசியைக் கொண்டு ஒரு செயற்குழு அமைக்கப் படுகின்றது.

அருட்பணி இக்னேசியஸ் வருணகுலசிங்கம்
தேசிய வழிபாட்டு இயக்குனர்

(GIRM : The General Instructions of the Roman Missal
உரோமை திருப்பலிப் புத்தகத்திற்கான பொது விளக்கங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைத்துப் பார்க்கிறேன்

அருட்பணி. NC. அருள்வரதன்.

உன்னிடம் ஒரு கேள்வி
உன்னையே நீ கேட்டுப்பார்
உனக்காகப் பாடுகள் பட்டவரை
நீ
ஒரு முறையேனும்
நினைத்ததுண்டா
சரி அதுதான் இல்லை
அவர் சொன்னது ஒன்றாவது
உன்
மனதைத் தொடவில்லையா
உன் வாழ்வுக்கு உதவியாக
பத்துக்கட்டளைகளைத்தந்தாரே
ஞாபகமில்லையா
இக் காலத்தில் அளவுக்குமீறி
நடக்கின்ற
கொலைகளை அறிந்து தானோ
'கொலை செய்யாதே' என்று
ஏற்கனவே சொல்லிவைத்தார்
ஆனால் இன்று
கொலைகள்
சர்வசாதாரணமாகிவிட்டதே.
'பொய்'
எத்தனையோ உண்மைகளை
மறைத்துப்பிடிக்கும்
மூடுதிரைதான்
ஆனாலும்
பொய்கள் மனித வாழ்வுடன்
இரண்டறக்கலந்து விட்டால்
'உண்மையும்'
எங்கோ
ஒதுங்கிக்கொள்கிறதே

இதை நீ
நினைக்கவில்லையா
பொய்யாக
பல காலம் வாழ்வதை விட
உண்மையாக
ஒரு நிமிடம்
வாழ்ந்தாலே போதும்
எங்கோ
கேட்டகுரல்
உன் காதுகளுக்கு
எட்டவில்லையா
போகட்டும்
இதைக் கொஞ்சம் கேள்
காய்த்த மரத்துக்குத்தான்
கல்லெறி
அதிக மென்பார்கள்
உண்மைதானே
அதற்காக
நீ
காய்க்காமல்
இருந்துவிடாதே.
ஏனென்றால்
மலர்ந்து விட்டால்
பறித்து விடுவார்கள்
என்பதற்காக
பூக்கள்
பூக்காமல் விடுவதில்லையே.

## சர்வதேச சிறுவர் தினம் 2016

இன்றைய சிறுவர் நாளைய தலைவர் என்று அனைவரும் கூறுபவர்களாக உள்ளனர். இது எந்த வகையில் உண்மை நிலையை அடைகிறது. தற்போதய காலத்தில் அதிகமான பெற்றோர் சிறு வயது முதல் பிள்ளைகளை அன்பு பாசத்தைக் கொட்டி அவர்கள் மேல் அக்கறை கொண்டு பாடசாலை அழைத்துச் சென்று அவர்களை கல்வித்துறையில் ஈடுபடவைத்து ஆன்மீக அறிவு, உடற்கல்வி, நல்லொழுக்கத்தை பழக்கி சமுதாயத்தில் நல்ல ஒழுக்கசீலராக்க எவ்வளவோ கஸ்டப்படுகிறார்கள். அவர்கள் வளர்ந்த பின் நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் பயன் தரும், பலன் அளிக்கும் நல்ல கனிகளாக திகழ்கின்றார்கள்.இது ஒரு புறமிருக்க மேலும் அதிகமான பிள்ளைகள் தமது பெற்றோரை, பெரியோரை, ஆசான்களை மதிப்பதில்லை தமது கால்கள் போனபோக்கிலே வழிமாறிச் செல்கின்றார்கள் இதற்கு இவர்களது நண்பர்களும் காரணம் தான்.

தற்போது நாளாந்த பத்திரிக்கைகளில் வரும் செய்தியினைப் பார்த்தால் இப்படியும் ஒரு சந்ததியினர், இளைஞர்கள் இருக்கின்றார்களா? எனும் கேள்வி கேட்குமளவிற்கு நடமாடுகின்றார்கள். பாடசாலைச் சிறுவர்களும் இந்த வயதினில் போதை வஸ்துக்கு அடிமையாகி எவ்வளவோ தகாதவேலைகளை புரிகின்றனர். அநேக வசதி படைத்த வீடுகளில் மறைக்கப்படுகின்றன. சாதாரண ஏழை மக்களது வீடுகளில் நடைபெறும் சம்பவங்கள் அம்பலமாகின்றன இதன் தாக்கங்களைப் பற்றி அறிந்துள்ளனரோ அல்லது அறிந்தும் அறியாமலும் ஏனோ தானோவென எண்ணிகால் போனபோக்கிலே போய்க் கொண்டிருக் கின்றார்களா? இவர்களுக்கு இவர்கள் எதிர்காலம் பற்றிய சிந்தனை கிடையாது இப்படிப்பட்டவர்கள் கஞ்சா ஹெரோயின் போன்றவற்றில் ஆரம்பித்து மது, மாது இறுதியில் கொலையுடன் முடிக்குமளவிற்கு சென்று எதிர் காலம் பாழாய்ப் போகின்றது. பின் அடிதடியில் சென்று தடுப்புமுகம் ஏன் தூக்கு தண்டனைக்கும் ஆளாக வேண்டியிருக்கும். இதற்கெல்லாம் யார் காரணம் பெற்றோர், சமுதாயத்தில் சில சந்தர்ப்பங்களில் நாமும் பங்கேற்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

தவறுகள் நடைபெறும் வேளைகளில் ஏனோ தானோவென முற்றாக ஒதுங்கி இருத்தலுமாகும், வயதுக் கேற்ப செயற்பாடுகளில்லை அப்பாற்பட்டவர்களுக்கான செயற்பாடுகளே மேற்கொள்ளப்படுகின்றது. இவர்கள் தமது எதிர்காலத்தைப் பற்றியோ, சமுதாயத்தைப் பற்றியோ ஏன் தமது பெற்றோர் குடும்பத்தினரையோ அதிலும் மேலாக படித்த பாடசாலையின் நற் பெயருக்குப் பங்கம் விளைவிப்பவர்களாக வாழ்கிறார்கள்.13,14 வயதினில் இளவயது திருமண ஆவலில் திரியும் எத்தனை சிறுவர்கள் உள்ளனர் தினமும் பத்திரிகையைப் பார்த்தால் யாவும் வெட்டவெளிச்சமாகும். மேலும் சிறுவர்களது போக்கிற்கு பெற்றோர், உறவினர், பெரியோரும் காரணிகளாக உள்ளனர் சிறுவயதில் செல்போன், பேஸ்புக் தேவையற்ற புகைப்படங்கள், தகாத நண்பர்களது சகவாசம் இது போன்ற தொடர்புகளாலேயே இளம் வயதினரின் எதிர்காலம் வீணாய் போகிறது ஒரு அவசர செய்திப் பரிமாற்றத்திற்காக செல்போன் பாவிப்பது ஆனால் தேவையற்ற விடயங்களில் ஈடுபடுதல் தற்போது பெரியோரது கையில் செல்போன் இருக்கோ இல்லையோ ஆனால் ஒவ்வொரு சிறுவர் கையிலும் செல்போன் இருக்குமளவில் சமுதாயம் முன்னேறியுள்ளது. அன்புச் சிறுவர்களே உங்களது வாழ்க்கை மேலோங்க தேவையற்ற விடையங்களைத் தவிர்த்து நல்ல எண்ணங்கள் சிந்தனைகளை நினைவில் நிறுத்தி பெற்றோர், ஆசான், சமயப் பெரியோரை மதித்து அவர்களது அறிவுரைகளை கேட்டு ஆன்மீகத்தில் சிறந்து விளங்கி வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பிரயோசனமுள்ள ஒழுக்க சீலர்களாக திகழ எமது ஆசீருடன் சிறுவர் தினத்தில் வாழ்த்து கூறுகிறேன்.

ஏ.ஜோதி..

## வாரம் ஒரு வரம் கேட்போம்

**அறிவு**

- ❖ சிறந்த நூல்களை வாசித்து அறிவை வளர்த்துக் கொள்.
- ❖ கடவுளின் வழி மனிதர்களின் வளிகளல்ல. கடவுளின் வழி செல்
- ❖ குழந்தைகள் அறிவுவளர்க்கும் புத்தகங்களைப் படிக்க உதவு.
- ❖ அறிவுத்திறன் படைத்தவனை நாடு. அவன் ஏற்றும் தீபம் சுடர்விட்டு எரியும்.
- ❖ வாழ்க்கையின் மையம் அறிவுத் திறன் அதனை அடைய முயற்சி செய்.
- ❖ மதிப்பீட்டை உணராது எண்ணிக்கை அதிகம் பெறுவது நன்றல்ல. காலம் குறுகியது, அரிதானது விவேகத்தோடு செயற்படு

**சேமிப்பு**

- ❖ தேவையற்ற செலவுகளைக் குறைத்து தேவைக்குச் செலவழி.
- ❖ உன் முதிர்ந்த வயதின் தேவைக்கு சேமித்துவை.
- ❖ உன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மருத்து நலபாதுகாப்பகத்தில் சேர்ந்து அதன் பலன்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ தண்ணீரைச் சிக்கனமாக உபயோகப்படுத்து. மழைநீர் சேகரிப்பை ஆதரி.
- ❖ வெளியில் சாப்பிடும் பழக்கத்தை விட்டு விடு.
- ❖ விரும்புவதை எல்லாம் வாங்காதே. அது சேமிப்புக்குப் பதிலாக செலவையே தரும்.
- ❖ சேமிப்பை குழந்தைகளிடம் ஊக்குவி.

**பொறுப்புணர்வு**

- ❖ குடும்பத்திலும் வெளி உலகிலும் உம் பொறுப்புகளை அறிந்து கொள்.
- ❖ குடும்பத்திலும் சமுதாயத்திலும் உள்ள பொறுப்புகளில் பங்கெடு.
- ❖ உன்னுடைய பொறுப்புகளைச் செய்வதில் உண்மையுள்ளவனாய் இரு.
- ❖ பெற்றோர்கள் குடும்பத்திலும் குழந்தைகளிடமும் தங்களுக்குள்ள கடமைகளை உணர்ந்து செயலாற்ற வேண்டும்.
- ❖ உன் பெற்றோர்களிடம் உனக்குள்ள கடமைகளை உணர்ந்து செயற்படு.
- ❖ ஆசிரியர்கள் மாணவர்களிடம் தலைமைத்துவ பண்புகளை வளர்க்க வேண்டும்.
- ❖ நாட்டின் சட்டங்களை மதித்து நல்ல குடிமகனாக வாழ வேண்டும்.

**உற்சாகம்**

- ❖ உன் பிழைகளைச் சுட்டிக்காட்டும் போது நல்மனதோடு ஏற்றுக் கொள்.
- ❖ தோல்வியைக் கண்டு மனந்தளராதே. திரும்பவும் முயற்சி செய்.
- ❖ உன்னைப் பக்குவப்படுத்தும் செயல்களுக்கு வழிவிடு.
- ❖ ஒவ்வொரு செயலையும் முழு முயற்சியுடன் செய்ளு அது உலகையும் உனதாக்கும்.
- ❖ விளையாட்டுப் போட்டிகளின் வழியாய் இளைஞர்களை உற்சாகப்படுத்து.
- ❖ உற்சாகப்படுத்தும் நண்பர்களைப் பயன்படுத்திக் கொள்.
- ❖ வெற்றி பெற்றவர்களைப் பாராட்டி அவர்களை உற்சாகப்படுத்து.

அருட்பணி. ஆஞ்சலோபொன்னையா. ஜே.ச. நன்றி: பீட்டர்தும்மா

## பொக்கை வாய் மனிதர்



உண்மையைப் பேசும் பொக்கை வாய்
நன்மையை நயமாய் செய்திட
நாளும் உறுதியாய் உழைத்திட்டே
வன்முறையை களைந்திட்ட பொக்கை வாய்

அகிம்சையை அடித்தளமாக்கி
அடிமைகள் விடுதலை பெற வேண்டி
தன்னையே நாட்டிற்கு அர்ப்பணித்து
படிப்படியாய் மக்களைப் பக்குவப்படுத்தி
சத்திய சோதனையில் பண்படுத்தி
நித்திய போதனைகளை பறைசாற்றி
சுதந்திரக் காற்றை அனைவரும் சுவாசிக்க
சமாதானப் புறாவாய் விளங்கிய பொக்கை வாய்

அனைவருக்கும் பொதுமொழி மழலை மொழி
மழலை மொழியின் தனிசிறப்பே பொக்கை வாய்
இறையன்பின் நடைமுறையே கிறீஸ்தவம்
கிறீஸ்தவத்தின் வெளிப்பாடே காந்தியம்
வாழ்க காந்தியம் வாழ்க அகிம்சைத் தத்துவம்

## திருவிவிலியம்



திருவிவிலியம் ஒரு புத்தகமே
தினம் வாசிக்கும் நமக்கோ அது ஒரு யுத்தக்களமே
போராடு போராடு தினம் தினம் போராடு
வார்த்தை அதை வாழ்வாக்கிப் போராடு

திருவிவிலியம் காகிதத்தால் ஆனது -ஆனால்
நமக்கோ அது கர்த்தர் முகம் காட்டுமது
திருவிவிலியம் மையாலானஎெழுத்துக்களால் ஆனது - ஆனால்
நமக்கோ அது மீட்பின் இரத்தத் துளிகளே
திருவிவிலியத்தில் வாழ்வுக்கான பாதையுண்டு
சாவுக்கான பாதையுண்டு
எதை நீ தெரிந்து கொள்ளப் போகின்றாய் இப்போது
தினம் நீ வாழ்வதற்கு திருவிவிலியம் படித்து விடு
எதுவும் புரியவில்லை என்று சொன்னால்
உண்மையுள்ள உனமனதை உன்னதரில் கொடுத்து விடு
கிடைத்து விடும் நல்வாழ்வு அப்போது

திருவிவிலிய வார்த்தைகளை வாழ்வாக்கி
வாழ வாஞ்சை கொள்கின்றாயோ
திருந்தாத மனிதன் உன்னை வெறுத்திடுவான் - அஞ்சாதே
ஆண்டவரோ அருகிருப்பார் மறவாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹாய் குட்டீஸ்

### திருவிவிலிய புதிர் போட்டி எண் : 28

### 1 அரசர்கள் 1–11 அதிகாரங்கள்



1. சாலமோனின் தாய் யார் ?
விடை:.................................................................

2. சாலமோன் கடைப்பிடிக்காத ஆண்டவரின் கட்டளை எது?
விடை:.................................................................

3. தாவீது இஸ்ரயேல் மீது எவ்வளவு காலம் ஆட்சி செய்தார்?
விடை :.................................................................

4. மிக முக்கியமான தொழுகை மேடு எங்கிருந்தது?
விடை :.................................................................

5. தாவீதுக்கு வாழ்நாள் எல்லாம் நண்பராயிருந்த மன்னர் யார்?
விடை :.................................................................

6. சாலமோன் எவற்றில் மிகச் சிறந்து விளங்கினார்?
விடை :.................................................................

7. சாலமோன் எந்த மாதத்தில் கோவில் கட்டத் தொடங்கினார்?
விடை :.................................................................

8. லெபனோனின் வனம் எது?
விடை :.................................................................

9. ஈராம் ......................................................... பொன்னை அரசருக்கு அனுப்பியிருந்தார். (இலக்கத்தில் குறிப்பிடவும்)

10.சாலமோனைச் சோதிக்க வந்த அரசி யார்?
விடை :.................................................................

11. ஆண்டவரின் பேழைக்குள் இருந்தது என்ன?
விடை :.................................................................

12. சாலமோன் தம் அரண்மனை முழுவதையும் கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் ஆயின?
விடை :.................................................................

பெயர் :.................................................................

முகவரி :.................................................................

பங்கு :.................................................................

முடிவுத்திகதி:10. 11. 2016

## ஹாய் குட்டீஸ்

### திருவிவிலிய புதிர் போட்டி எண் : 27

### 2சாமுவேல் 13 – 24 அதிகாரங்கள்

**விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 01.சாம்பல் | (13:19) | 07.கீசின் கல்லறை | (21:13 -14) |
| 02.பெனாயா | (23:20) | 08.தாவீது | (20:26) |
| 03.நான்கு | (14:27) | 09.கேரா | (19:18) |
| 04.ஊசாய் | (15:37) | 10.பெத்லகேம் | (23:15) |
| 05.தம்குரலை | (22:14) | 11.நகரவாயிலின் (பாதை) | (15:02) |
| 06.வலிமை மிகு வீரர் | (17:08) | 12.கொள்ளை நோய் | (24:25) |

பங்கு பற்றியவர்கள் - 61 பேர்.

மிகச் சரியாக விடையளித்தோர் - 40 பேர்

### பரிசுக்குரியவர்கள்

| 1ம் பரிசு 500/= ரூபா | 1ம் பரிசு 300/= ரூபா | 3ம் பரிசு 200/= ரூபா |
|---|---|---|
| தே.சமில்டன்<br>3ம்.வட்டாரம்.<br>நிலாவெளி | அபிஆஷா.<br>இல :25/28.வேளாங்கண்ணி வீதி.<br>பள்ளத்தோட்டம். | கிறிஸ்ரி ஜெனிக்ஷயா.<br>இல:62.இலிங்கநகர்.<br>திருகோணமலை. |

### பாராட்டுக்குரியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. ஜி.கிஷோன் | - பாலையூற்று. | 19. ஜே.ஷெனுவ் | - மூதூர். |
| 02. வெ.பெனடிக்ஷன் | - கும்புறுபிட்டி | 20. அ.கரோளினி | - பேராலயம். |
| 03. எய்டன்.எஸ் | - உவர்மலை | 21. சு.கௌசல்யா | - பாலையூற்று |
| 04. ஜி.குணசேகரன் | - பாலையூற்று | 22. தினேஸ்ராஜ் | - செல்வநாயகபுரம் |
| 05. கேசல் வறிஸ்மன் | - பாலையூற்று | 23. ஆர்.எமில்ராஜ் | - செல்வநாயகபுரம் |
| 06. எஸ்.ராகுல் | - பாலையூற்று | 24. மை.ஆ.பிறின்சியா | - பாலையூற்று |
| 07. தனுஜா.போல் | - பாலையூற்று | 25. தே.ஜெரோம் | - சிறிய குருமடம் |
| 08. எஸ்.கன்சிவறா | - நிலாவெளி | 26. பீ.கிரிசாளன் | - சாம்பல்தீவு |
| 09. இ.லீனா | - நிலாவெளி | 27. எம்.மோனிக்கா | - பாலையூற்று |
| 10. இ.கேமியன்கிளிட்டஸ் | - நிலாவெளி | 28.. டி.சுஜிவன் | - சிறியகுருமடம் |
| 11. லி.அன்றிபா ஸ்டெப்னி | - பாலையூற்று | 29. எம். எச்.அனிசா | - பாலையூற்று |
| 12. சரோனா.ஆர்.எப் | - பேராலயம் | 30. ஆர்.பி.சனாலி | - மூதூர் |
| 13. ஆன்வஜிரா.ஆர்.எப். | - பேராலயம் | 31. ஜே.டாணி | - பாலையூற்று |
| 14. டானியலா.ஆர்.எப் | - பேராலயம் | 32. ஜெனிபர் | - அன்புவழிபுரம் |
| 15. செ.அ. ஆரோன். | - குவாடலூப்பே | 33. என்.எஸ்.யதுர்ஷன் | - பாலையூற்று |
| 16. பி.மெரின் | - முல்லைத்தீவு | 34. ஏ.சகாயம் | - பாலையூற்று |
| 17. தரோன்ஷன் | - செல்வநாயகபுரம் | 35. ஜே.நிருஷா | - குவாடலூப்பே |
| 18. யெ.யெய.தனுஷன் | - பாலையூற்று | 36. இ.மேரிஅக்னஸ் | - பாலையூற்று |
| | | 37. எல்.ரக்ஷனா | - உவர்மலை. |

பங்கு பற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றியும்

☞ 1ம் பக்க தொடர்ச்சி

## தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தின் தோற்றம், வளர்ச்சி .

கத்தோலிக்க ஆசிரியர்களை சந்தித்தல், அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம், பாடசாலை மாணவர்களுக்கு, சிறப்பாக க.பொ.த (சாத) தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்குகள், சம்மேளனங்கள் செயலமர்வுகள் நடாத்த வேண்டிய தேவை, பாடசாலை கணக்கெடுப்பு, தபால் மூலம் கற்பித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

மேற்கூறப்பட்ட நால்வரும் இப்பணிகளைப் பகிர்ந்து ஆற்றத் தொடங்கினர்.

அக்காலத்திலே மறைக்கல்வி அலுவலகம், பேராயர் இல்லத்தில் மேல்மாடிக்குச் செல்லும் படிகளின் மறுபுறம் 12 அடி மட்டுமே கொண்ட நிலப்பரப்பில் அமைந்திருந்தது. அமர்ந்து எழுதுவதற்காக அங்கே ஒருபயமேசையும் கதிரையும் இருந்தது. தபால் மூலம் கற்பிக்கப்படும் சமய பாடத்திற்காக பாடம் எழுதி முடிந்ததும் அதனைத் தட்டச்சில் பதித்து பிரதிகளை எடுக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்காக தட்டச்சு இயந்திரமும் கையால் சுழற்றி பிரதிகளை எடுக்கின்றபழைய, இயந்திரமொன்றையும் அருட்பணி. சில்வேஸ்டர் அடிகளார் எப்படியோ தேடிப்பெற்றிருந்தார். இந்த இயந்திரங்களை வைத்திருப்பதற்கு இடமில்லாததால் பக்கத்திலிருந்த நோயாளர் அறையிலே அவை வைக்கப்பட்டன. சில்வேஸ்டர் அடிகளார் பிரதிகளை எடுக்கும் இயந்திரத்தைக் கையால் மாறி மாறி சுழற்றி பாடம் தயாரித்தார். அக்காலத்தில் சிங்கள மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்ட ஜெர்மனிய (மியுனிக்) பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பாடம் தயாரிக்கப்பட்டது. நான்கு பகுதிகளைக் கொண்ட எமது கிறிஸ்தவ மறை பாடநூலும் வருடந்தோறும் மாற்றப்பட்ட நற்செய்தி நூலும் பாடசாலை மறை பாடத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. அதுவரை பயன்படுத்தப்பட்ட கத்தோலிக்க மறைபாட நூலுடன் ஒப்பிட்டு கத்தோலிக்க மறைப் பாட நூலின் நான்கு பகுதிகளும் புதிய வடிவம் பெற்றன. இவற்றைக் கற்பித்தலானது. ஆசிரியருக்கும் சவாலாக இருந்தது. இதனால் பரீட்சைக்குத் தோற்றுவோரும் பாதிக்கப்பட்டனர். ஆகவே சிங்கள மொழியில் தபால் மூலம் கற்பித்தலும் இடம்பெற்றது. தபால் மூலம் சமயக்கல்வி கற்பிக்கப்பட்டதால் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். கத்தோலிக்கமறை பாடநூல் பிரசித்தி பெற்றதைத் தொடர்ந்து தபால் மூலம் கற்பித்தல் நிறுத்தப்பட்டது.

இவ்வேளையில், மறைக்கல்வி பணிக்காக அயராது உழைத்து, பொறுப்புடன் செயற்பட்ட அருட்பணி. சில்வேஸ்டர் அடிகளாருக்கு, இலங்கையில் எல்லா பாடசாலை களுக்கும் சென்று, அங்கு கற்பிக்கப்படும் சமய (கத்தோலிக்க) கல்வி பற்றி பரீட்சிப் பதற்கான அதிகாரம் பெற்ற ஆணையாளர்" என்ற மேன்மையான நியமனம் இலங்கை அரசினால் வழங்கப்பட்டது. அவ்வாறே கொழும்பு பேராலய மறைமாவட்டத்தின் மறைக் கல்வி இயக்குனராகவும் அவர் பணியாற்றினார். இந்த கால கட்டத்தில் தான் தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தின் தமிழ்ப்பிரிவிலே பணியாற்றுவதற்கு மூவர் இணைக்கப் பட்டனர். அவர்கள் இந்தியாவில் திரிவேந்திர நிலையத்தில் பயிற்சி பெற்றுவந்திருந்த அருட்சகோதரர் அல்பிரட், அருட்சகோதரி ரோஸ் பர்னாந்து மற்றும் திருவாளர் ஸ்டெனிஸ்லாஸ் விக்டோரியா ஆகியோராவர். தேசியமறைக்கல்வி நடுநிலையத்தின தமிழ்ப் பிரிவில் பணியாற்றிய முதற் பணியாளர்கள் இவர்களே.

மறைக்கல்வி வளர்ச்சியில் மேலும் ஒரு நிலையாக, தம்மிட்ட என்ற இடத்தில் மறைக்கல்வி பயிற்சி கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. பயிற்சி பெறும் மறையாசிரியர்கள் தங்கியிருக்க வசதி, கேட்போர் கூடம் மற்றும் அனைத்து வசதிகளையும் கொண்டிருந்த இந்த பயிற்சிய கத்திலே தேசிய ரீதியில் மேலான பயிற்சியளிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் தேசிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்ற இரண்டாம் குழுவின்பின் இந்த மறைக்கல்வி பயிற்சி கல்லூரியின் பணிகள் நிறுத்தப்பட வேண்டியேற்பட்டது. 1975ம் ஆண்டு ஜுபிலி வருடமாக இருந்தமையினால் உலகின் மறைபரப்பு நாடுகள் 85 இலுமிருந்து பொது நிலை மறைபரப்பாளர்கள் 450 பேர் உரோமைக்கு அழைக்கப்பட்டு பயணத்தை மேற்கொண்டனர். இதில் இலங்கையிலிருந்து ஐவர் பங்குபெ காண்டனர். மறைக்கல்வி பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் மாநாடுகள் சிலவற்றில் பங்கு கொள்ளவும் வரலாற்று இடங்களைப் பார்வையிடவும் திருத்தந்தையை சந்திக்கவும் இவர்களுக்கு வாய்ப்புக் கிட்டியது. இதுவரை காலமும் ஒன்றாகவே இயங்கி வந்த தேசிய மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்கள்இரண்டும் இப்போது வெவ்வேறாக இயங்க வேண்டியகாலம் வந்தது. அதன்படி தேசிய மறைக்கல்விபணி இயக்குனராக அருட்பணி. தொன்சில்வேஸ்டர் அடிகளாரும் கொழும்பு மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனராக அருட்பணி சிறில் எஸ் பெரேரா அடிகளாரும் பணிகளைப் பொறுப்பேற்றனர்.பேராயர் இல்லத்திலிருந்த மறைக்கல்வி நடுநிலையம் இல 29, நொரிஸ் ஒழுங்கையிலிருந்த இல்லத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால் இதுவும் நிலையான இடமாக இருக்கவில்லை. கட்டிடமும் பழுதடைந்திருந்ததால் மறைக்கல்வி நடுநிலையம் அதன்பின் அக்குவைனஸ் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. இந்த கல்லூரிக்குள்ளும் நான்கு முறை இடம்மாற்றப்பட்டாலும் அக்குவைனஸ் கல்லூரியும் நிலையான இடமாக இருக்கவில்லை. அங்கேயுள்ள மாணவர்களுக்கு இடவசதி போதாமையினால் மறைக்கல்வி நடுநிலையம் அங்கிருந்து பொரளை யோசேவாஸ் நிலையத்தின் கீழ் தளத்திற்கு கொண்டு வரப்பட்டது. அங்கிருந்து பின் நாளில் பெல்கம் இடத்தில் அமைந்துள்ள ஆயர் மன்ற கட்டிடத்தின் முதலாம் மாடிக்கு கொண்டுவரப்பட்டது. இது எமது நிரந்தர அலுவலகமாக இப்போது உள்ளது. மீண்டும் சற்று பின்நோக்கி பார்க்கும் போது பயணிக்கும் திருச்சபையைப் போல இவ்வாறு இடம்மாறி மாறி எமது மறைக்கல்வி நிலைய அலுவலகத்தை அமைத்துக் கொண்டிருந்த கால கட்டத்திலே எமது மறைக் கல்வி நடுநிலைய அமைப்பிலே மேலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இதுவரை காலமும் தேசிய மறைக்கல்வி நடுநிலைய இயக்குனராக அதிக அர்ப்பணிப்புடன் அளப்பெரும் பணியாற்றிய தொன் சில்வேஸ்டர் அடிகளார் கொழும்பு உயர் மறைமாவட்ட குரு முதல்வராக நியமனம் பெற்றார். அதனைத் தொடர்ந்து யாழ் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை எமது ஆணைக்குழு தலைவரானார். ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபடி வார இறுதி, போயாநாள், பாடசாலை விடுமுறை நாள் ஆகிய நாட்களில் ஆசிரியர், மறையாசிரியர்களுக்காக அவர்களை அறிவுறுத்தும் கூட்டங்கள், பயிற்சி பாசறை, வகுப்புகள் ஆகியன இடையிடையே நடாத்தப்பட்டாலும் அவை முறையாக செயற்படவில்லை. இருப்பினும் அவற்றில் பங்குகொண்டோருக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இத்தகைய காரணங்களினால் ஆசிரியர்கள், மறையாசிரியர்கள், மாணவர்களைக் கருத்திற்கொண்டு சஞ்சிகையொன்று மாதாந்தம் வெளியிடப்பட்டது. ஆனால் இரண்டு வருடங்களின் பின் இதனை இடைநிறுத்த வேண்டியேற்பட்டது. தம்மிட்டதேசிய மறையாசிரியர் பயிற்சிக் கல்லூரியும் செயலிழந்த பின் முறையாக மறையாசிரியர் பயிற்சி செயற்படுத்தப்படவில்லை. க.பொ.த (சா/தர.உ/தரம்) சித்திபெற்றிருந்தவர்கள் தொண்டர் ஆசிரியர்களாக மறையைக் கற்பித்தனர். எதிர் காலத்தில் அரச பாடசாலைகளிலே சமய பாடம் கற்பிப்பதற்கு எமது சமய ஆசிரியர்களை ஒழுங்கு செய்ய வேண்டிய தேவை ஏற்படின் அதற்குத் தகுதியானவர்கள் இருக்கவில்லை. இதனால் தூரநோக்குக் கொண்டு செயற்படும் அப்போதைய ஆணைக்குழு தலைவர் மேதகு தியோகுபிள்ளை ஆண்டகை ஆணைக்குழு கூட்டத்தின் போது. ஒரு ஆலோசனையை முன்வைத்தார். மறையாசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நீண்ட கால பாடத்திட்டம் ஆரம்பிக்க வேண்டியது காலத்தின் தேவையாதலால் அவர்களுக்கு பாடங்கள், பயிற்சியளித்து அவர்களின் மறையறிவை வளப்படுத்தி பரீட்சைக்குத் தயார்படுத்தி, சித்தி பெறுவோருக்கு தகுதியான மறையாசிரியர் சான்றிதழ் வழங்க வேண்டும் என்பதே அவரது ஆலோசனையாக இருந்தது. இக் கருத்து ஏக மனதாக அக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அருட்சகோதரி ரஞ்சி போல்துரை
தேசிய மறைக்கல்வி நடுநிலையம்
கொழும்பு - 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 20
## உரோமையர் திருமுகம் - அதி.1 - 4 விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீ | தி | யா | க | க் | க | ரு | தி | னா | ர் |
| ■ | நே | ர் | மை | யு | டை | யோ | ர் | ■ | ■ |
| ■ | கு | க் | ரு | றோ | ற் | ய | வை | ர் | பா |
| எ | ■ | ■ | நா | று | வ | ய | து | ■ | ■ |
| ண் | ம் | யு | தி | மை | அ | ம் | ளு | ரு | அ |
| ண | வா | ■ | ம் | ச | ச் | ய | றை | இ | ■ |
| ற் | ய் | ■ | ம் | ள | ள் | உ | ன | டி | க |
| ற | மை | ம | தி | நு | ட் | ப | ம் | ■ | ■ |
| ■ | ■ | று | ற் | யி | போ | டு | ண் | ரு | இ |
| த | ந் | தை | யா | க் | கு | கி | றே | ன் | ■ |

1. அருளும் அமைதியும்
2. இருண்டு போயிற்று
3. நேர்மையுடையோர்
4. கடின உள்ளம்
5. மதிநுட்பம்
6. இறையச்சம்
7. நீதியாகக் கருதினார்
8. எண்ணற்ற
9. வாய்மை
10. பார்வையற்றோருக்கு
11. தந்தையாக்குகிறேன்
12. நூறுவயது



**போட்டியில் கலந்து கொண்டவர்கள் - 69பேர்.**

**சரியாக விடை எழுதியோர் - 44பேர்**

**பரிசுக்குரியவர்கள்:**

| 1ம் பரிசு 500/= | 2ம் பரிசு 300/= | 3ம் பரிசு 300/= |
|---|---|---|
| ஜோ.அருஷியா<br>இல :62 இலிங்கநகர்<br>திருகோணமலை. | சு.அப்சரா நிவேதி<br>3ம் வட்டாரம்<br>நிலாவெளி | கி.ஜெனிக்ஷயா<br>இல101,காந்திநகர்<br>அன்புவழிபுரம் |

## பாராட்டுக்குரியவர்கள்

1. அ.கரோளினி கிறீப்திக்கா - பேராலயம்
2. எஸ்.எய்டன் - உவர்மலை
3. திருமதி ஜே.ரி.காமலீன் - மூதூர்
4. ஆர்.எமில்ராஜ் - செல்வநாயகபுரம்
5. வி.சொய்ஸ்கிளின்டன் - நிலாவெளி
6. ஆர்.டிலுக்ஸ்ராஜ் - செல்வநாயகபுரம்
7. தே.சமில்டன் - நிலாவெளி
8. ச.மிலானி - சாம்பல் தீவு
9. வெ.கெவின் சேகித் - கும்புறுபிட்டி
10. ஜே.புளோரிடா - பேராலயம்
11. ஏ.ஜி.சாதனா - மன்னார்
12. ஆன்.வஜீரா ஆர்.எப். - பேராலயம்
13. அ.சொர்ணம் - பாலையூற்று
14. அ.ஜீவகாந் - பாலையூற்று
15. தே.லக்ஷிகா - கும்புறுபிட்டி
16. எல்.எஸ்.பியூரா - பேராலயம்
17. கொ.நிலக்ஷன் பாத்லட் - பாலையூற்று
18. க.நிரோஜா - பேராலயம்
19. எம்.டிலுக்ஷன் - பாலையூற்று
20. ஷோனாலி - மூதூர்
21. ட.சுஜீவன் - சிறிய குருமடம்,சாம்பல்தீவு
22. கி.மதுமிதன் - பாலையூற்று
23. இ.மேரி அக்னஸ் - பாலையூற்று
24. வி.அன்றியா ஸ்டெப்னி - பாலையூற்று
25. ச.டே.வோறன் பிள்ளை - உவர்மலை
26. நா.மெற்றில்டா - பாலையூற்று
27. திருமதி.டே. நிதிஈஸ்வரி - உவர்மலை
28. ஏ.இருதயமேரி - இறையிரக்கம்
29. டொறத்தி விமலதாஸ் - பேராலயம்
30. அ.கிஷான் - குவாடலூப்பே
31. பி.டொலிடா - பாலையூற்று
32. சரோனா ஆர்.எப் - பேராலயம்
33. ஜெ.பிரினித்தா - முல்லைத்தீவு
34. எல்.ரக்ஷனா - உவர்மலை
35. டே.மெருஷியன் பிள்ளை - உவர்மலை
36. டானியலா ஆர்.எப் - பேராலயம்
37. திருமதி அ. எலிசபெத் - உவர்மலை
38. ஜோ.அருஷன் - அன்புவழிபுரம்
39. வேஜின் டி குருஸ் - அன்புவழிபுரம்
40. சு. சுவேக்கா - பாலையூற்று
41. மை.ஆ.பிறின்சியா - பாலையூற்று

**குறிப்பு:** பரிசுக்குரியவர்கள் தங்களது பரிசில்களை திருமறைக்கல்வி நடுநிலைய அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி – 21
## உரோமையர் திருமுகம் அதி . 5–9 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெ | ■ | ம | | | | ■ | | | வெ |
| | ■ | ■ | ந | | | | | ■ | |
| | ஒ | ■ | | | | | நா | | |
| | | வ | | | | | ■ | | |
| | | ■ | ரெ | | | | ■ | | |
| | | ■ | ■ | | | தூ | ■ | | |
| | | சொ | | | | | | ஏ | |
| ■ | தி | | | | | | | ■ | |
| | | | | | | | | த | ■ |
| ப | | | | | | | | | |

1. ந.........லுறவு
2. பெருமகி.........ச்சி
3. ஏமாற்............ம்
4. தண்ட......யிலி......ந்து
5. ஒன்........த்து
6. பழை....... மனி........... இய..........பு
7. புதியநெ.................யில்
8. சொந்.......... ம........னை
9. மனநி...............
10. வெ.........றி
11. திருவ..........பாடும்
12. நாடெங்..........ம்
13. வழிம.........பு
14. ரெபேக்..............
15. தூா...........து

பெயர் :.........................................

முகவரி :.........................................

பங்கு :.........................................

முடிவுத் திகதி – 10.11.2016

# மறைக்கல்வி கற்போம் –20

1. பழைய ஏற்பாட்டின் 46 புத்தகங்களையும் எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம்?
   4 பிரிவுகளாக.

2. பழைய ஏற்பாட்டின் 4 பிரிவுகள் எவை?
   திருச்சட்ட நூல்கள் - 05
   வரலாற்று நூல்கள் - 16
   ஞான நூல்கள் - 07
   இறைவாக்கினர் நூல்கள் - 18
   --------
   46
   --------



3. திருச்சட்ட நூல்கள் எவை?
   தொடக்கநூல் - 50 அதிகாரங்கள்
   விடுதலைப் பயண நூல் - 40 அதிகாரங்கள்
   லேவியர் நூல் - 27 அதிகாரங்கள்
   எண்ணிக்கை நூல் - 36 அதிகாரங்கள்
   இணைச்சட்டம் நூல் - 34 அதிகாரங்கள்

4. வரலாற்று நூல்கள் எவை?
   யோசுவா ,நீதித் தலைவர்கள் ,ரூத்து, 1சாமூவேல், 2சாமூவேல், 1,2,அரசர்கள், 1,2,குறிப்பேடு, எஸ்ரா,நெகேமியா, எஸ்தர் தோபித்து, யூதித்து,1,2,மக்கபேயர்.

5. ஞான நூல்கள் எவை?
   யோபு , திருப்பாடல்கள் நீதிமொழிகள் சபை உரையாளர் , இனிமைமிகு பாடல், சாலமோனின்ஞானம், சீராக்கின்ஞானம்.

6. கிறிஸ்துவின் வாழ்வின் குறிக்கோள் என்ன?
   கடவுளின் அன்பை ,அரசை , இரக்கத்தை வெளிப்படுத்துவது

7. கிறிஸ்துவுக்கு மிகவும் பிடித்தவர்கள் யார்?
   பாவிகள், குழந்தைகள் , விதவைகள் , சமாரியர்கள் ஆதரவற்றோர், அனாதைகள்.

8. கிறிஸ்து பிறந்த வருடம் எப்போது?
   ஏறத்தாழ கி.மு.6ம் நூற்றாண்டு

9. கிறிஸ்து நம்மிடம் எதிர் பார்ப்பது?
   அவரைப்போல் நாமும் பிறரை அன்பு செய்ய வேண்டும் என்று.

10. திருச்சபை என்றால் என்ன?
   ❖ கிறிஸ்துவை பின்பற்றும் இறைமக்கள் சமூதாயமே.
   ❖ இறைமக்கள் கூட்டம்

## கடந்த மாத இதழில் தவற விடப்பட்ட விபரம்

**திருகோணமலை மறைமாநில பங்குகள், ஆணைக்குழுக்கள், மற்றும் கன்னியர் இல்லங்களிலிருந்து எகெட் கரித்தாஸ் பணியகத்தினூடாக சேகரிக்கப்பட்ட 2016ம் ஆண்டிற்கான தவக்கால ஒறுத்தல் சேமிப்பு விபரம்**

❖ **தூய திருமுழுக்கு யோவான் ஆலயம் - சாம்பத்தீவு** - 6,400/=

முகாமைத்துவம் - எகெட் கரித்தாஸ், திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய மரியாள் பேராலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரின் செயற்பாடுகள்



தூய மரியாள் பேராலய வருடாந்த திருவிழா வினை சிறப்பிக்கும் வகையில் பங்கின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் மறைக் கல்வி மாணவர்களுக்கும் பங்கு மக்களுக்குமான சிறிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பங்குத் தந்தை மற்றும் உதவிப் பங்குத்தந்தை தலை மையில் திருவிழா அன்று மாலை ஆலய வளாக த்தில் நடைபெற்றது.

இதில் பங்கில் உள்ள அனைத்து மறைக்கல்வி மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர் .இவ் விளையாட்டுப் போட்டிகளை எமது ஒன்றிய உறுப்பினர்கள் சிறப்பான முறையில் வழிநடத்தினர். இவ் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பங்கு மக்களுக்கும் விசேட பரிசில்களும் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்
தூய மரியாள் பேராலயம்.

## தேசிய இளைஞர் ஞாயிறு



தேசிய இளைஞர் ஞாயிறு திருப்பலி - 2016 புனித மரியாள் பேராலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரால் இவ் வருடத்திற் கான தேசிய இளைஞர் ஞாயிறு சிறப்புத் திருப்பலி 04ம் திகதி செப்டம்பர் மாதம் அருட்தந்தை. றொய்சன் அடிகளாரின் தலைமை யில் பங்கில் நடைபெற்றது.

இத்திருப்பலியில் எமது பங்கு ஒன்றிய உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்
தூய மரியாள் பேராலயம்
திருகோணமலை மறைமாவட்டம்.

## தூய அன்னை தெரேசாவிற்காக நவநாள் திருப்பலிகளும், நன்றித் திருப்பலியும்.





அருளாளர் அன்னைதெரேசா அவர்களின் புனிதர் பட்டமளிப்பு விழாவிற்கு முன்னேற்பாடாக இலிங்கநகர் தூய யூதாததேயு ஆலயத்தில் நவநாள் திருப்பலிகள் 27.08.2016 சனி ஆரம்பித்து 04.09.2016ல் நிறைவாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. நவநாட் காலங்களில் அன்னை தெரேசா அவர்களின் வாழ்வைக் கருவாகக் கொண்டு அருட் பணியாளர்களான எஸ்.ஆர்.ஜெயரெட்ணம், டே. அன்ரூஸ்ரீபன், ஏ.றொகான் பேனாட், ஜே.அனிஸ்டன் மொறாயஸ் (இ.ச), எச்.ஜீட் ஜோன்சன், றொயிசன் ஸ்பாக்ஸ், அல்பிரட். (அ.ம.தி.)இவர்களோடு உவர்மலை பங்குத்தந்தை அருட்பணி அலெக்ஸ், அவர்களும் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி செபஸ்டியான் அவர்களும் சிறந்த ஆன்மீக சிந்தனைகளை வழங்கினாரகள். 05.09.2016. அன்று அன்னையின் திருவிழாத் திருப்பலி இலிங்கநகர் கருணை இல்லத்தில் திருகோண மலை மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட் அவர்களது தலைமையில் அருட்பணி ப.ஸ்பாக்ஸ் அவர்களும் உவர்மலை உதவிப் பங்குத் தந்தை அருட்பணி செபஸ்டியன் அவர்களும், இணைந்து ஒப்புக் கொடுத்தனர் திருப்பலியை சிறப்பிக்க வந்த குரு முதல்வரையும் அருட்தந்தையர் களையும் வரவேற்பதையும் திருப்பலியை சிறப்பிப் பதையும் படத்தில் காணலாம்.

அன்றைய நாள் திருப்பலி அன்னை தெரேசாவிற்குப் புனிதர் பட்டம் கொடுத்த நிகழ்வின் நன்றியாகவும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## புலமைப்பரிசு பரீட்சையில் சித்தி பெற்ற மாணவன்.



பீலியடி. கன்னியாவை பிறப்பிடமாகக் கொண்டு அன்புவளிபுரம் தி/கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் **சுகதாஸ் லிந்துஜன்** ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையிலே **164 புள்ளிகளைப்** பெற்று பாடசாலை மட்டத்தில் இரண்டாவது மாணவனாக இடம் பெற்றுள்ளார்.

லிந்துஜனின் தந்தை சுகதாஸ் தாய் நளினி. பல திறமைகளையும், ஆற்றல்களையும் கொண்ட லிந்துஜனை தொடர்ந்தும் முன்னேறி வளங்கள் காண

**திருமலைத்தீபம் வாயார வாழ்த்துகின்றது.**

## புதிய கூரையின் கீழ் 2ம் வருட திருநாள் திருப்பலி





பன்குளம் தூயஅந்தோனியார் ஆலயம் கடந்த வருடம் கூரையே இல்லாத மண்டபத்தில் 30வருடங்களின் பின் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்வருடம் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் பணிப்புரையில் அருட் பணி அன்ரூஸ்ரீபன் அவர்களின் மேற்பார்வையில் புதிய கூரை அமைக்கப்பட்டு கடந்த ஆகஸ்ட் மாதம் 01ம், 5ம், 16ம், திகதிகளில் நவநாள் திருப்பலி அருட்பணி இ.யூட்சர்வானந்தன் அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டு 17ம் திகதி புதன்காலை திருநாள் திருப்பலி அருட்பணி ஜொனந்தன் (மூதூர்பங்கு) அவர்கள் தலைமையில் அருட்தந்தையர்களான போல்றொபின்சன், றொகான்பேனாட், நிதிதான், யோன்பிள்ளை, யூட்சர்வானந்தன், பிலிப் ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். அன்றைய தினமே பங்கு மக்கள் ஒன்றிணைந்து ஆலய அபிவிருத்திப் பணிக்காக புதிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. திருநாள் திருப்பலிப் படங்களோடு புதிய நிர்வாக சபையுடன் ஆண்டகை அவர்களும் இணைந்து நிற்கும் படத்தையும் காணலாம் வனமாக இருந்த இடத்தை வளமாக மாற்றி மக்கள் மனதில் ஆலயமாக வெளிப்படுத்தி ஆன்மீக வழிகளில் நெறிப் படுத்தும் அருட்தந்தை ட.பிலிப் அடிகளார் அவர்களுக்கு பன்குளம் இறைமக்களாகிய நாம் நல்ல உடல் உள ஆன்மீக பலத்தைக் கொடுக்க வேண்டு மென இறைவனிடம் வேண்டுகிறோம்.

தகவல் :ஜே. தர்மப்பிரகாசம்
பன்குளம்

## புதிய நியமனங்கள்

**ஒக்டோபர் மாதம் 23ம் திகதி முதல் பின்வரும் பங்குகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.**

| | |
|---|---|
| நிலாவெளி தூய சூசையப்பர் ஆலயம் | - அருட்தந்தை யோ. டன்ஸ்டன் பிரெட்ரிக். |
| தூய குவாடலுப்பே அன்னை திருத்தலம் | - அருட்தந்தை பா.ஜெயபாலன், அ.ம.தி |
| உவர்மலைகுழந்தை இயேசு ஆலயம் | - அருட்தந்தை எஸ்.சுகுணேந்திரன் குரூஸ் |

தகவல்: ஆயர் பணிமனை.

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்
(யோவான் 11:25)

பிறப்பு
10
10
1934



இறப்பு
08
10
2000

### அமரர்.சரவணை அந்தோனிப்பிள்ளை

பாசமிகு தந்தையாய் எம்மை பாராட்டி சீராட்டி
வளர்த்த எங்கள் தந்தையே
கண்ணின் மணிபோல கருத்தாய் எம்மை
வளர்த்து ஆளாக்கி விட்டீரே
உமது அருமையை இப்போது உணர்கின்றோம்
உமது பிரிவை எண்ணி எந்நாளும் கலங்குகிறோம்
வாழ்வின் முடிவு மரணம் இல்லை தந்தையே
அதை எங்கள் வாழ்வில் உணர்கின்றோம்
உமது ஆன்மா என்றும் இறைவனில் இளைப்பாறட்டும்

தகவல் : A.கிளமன்ட் ஜீவதாஸ்
3ம் வட்டாரம்.
நிலாவெளி

உமது பிரிவை நினைவு கொள்ளும்
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org